CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருப்பரங்கிரிப் புராணம்

(12ஆவது கிரிவலச் சருக்கம்)

ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய
ஞானப் பிரகாச தேசிக
சுவாமிகள்,
துழாவூர் ஆதீனம்
குன்றக்குடி வழி - 630 206
தொலைபேசி எண் : 04577 - 264446

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam Funding Native Heritage Foundation, Kolkatta

பதிப்பாசிரியர் வெளியீடு. (1)
17/12/07
C.S.S

திருப்பரங்கிரிப் புராணம்

(12ஆவது கிரிவலச் சருக்கம்)

ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய
சிதம்பர தேசிகர் அவர்கள்
அருளிச் செய்த மூலம்

திருப்பரங்குன்றம் ஆறுகாற்பீடம்
வமீரவன் அம்பலவாண பாரதி என்பவர்
உரையுடன்

வெளியீட்டாளர்
ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய
ஞானப் பிரகாச தேசிக சுவாமிகள்,
துழாவூர் ஆதீனம்
குன்றக்குடி வழி - 630 206
தொலைபேசி எண் : 04577 - 264446

நாள் : 27-9-2007 படிகள் 500

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நூல் குறிப்பு

நூலின் பெயர்	:	திருப்பரங்கிரிப் புராணம் (12–ஆவது கிரிவலச் சருக்கம்)
பதிப்பாசிரியர்	:	ஸ்ரீ நிரம்ப அழகிய ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள்
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு
பதிப்பு ஆண்டு	:	2007 செப்டம்பர்
உரிமை	:	பதிப்பாசிரியர்
நூல் அளவு	:	டெம்மி சைஸ்
தாள்	:	70 GSM தாள்
பக்கம்	:	
அச்சு எழுத்தளவு	:	10 பாயிண்ட்
நூலின் கட்டுமானம்	:	சாதா
படிகள்	:	500
பொருள்	:	புராணம் (அச்சுப் புத்தகமாக வெளிவராத பகுதி 12–ஆவது கிரிவலச் சருக்கம் மட்டும்)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முன்னுரை

சைவத்தையும், தமிழையும் வளர்க்கின்ற சைவ ஆதீனங்கள் பதினெட்டு. அவற்றுள் நமது துழாவூர் ஆதீனமும் ஒன்று. இங்கு நகரத்தார் பெண்கள் குரு உபதேசம் பெற்று வருகின்றனர். இந்த ஆதீனத்தின் 19-ஆவது குருபீடமாக விளங்கியவர் ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய சிதம்பர தேசிக சுவாமிகளாவர். இவர்கள் சேதுபுராணம், திருப்பரங்கிரிபுராணம், திருவையாற்றுப்புராணம் ஆகிய புராணங்களைச் செய்தரளியவர்கள். திருவருட்பயன், உண்மை நெறி விளக்கம் ஆகிய நூல்களுக்கு உரை எழுதியுள்ளார்கள்.

இவர்கள் எழுதிய திருப்பரங்கிரி புராணம் 1928-இல், மதுரை தமிழ்ச் சங்க வித்துவான் மு.ரா. அருணாசலக்கவிராயர் உரையுடன் வெறிவந்துள்ளது. அதில் பாயிரச்சருக்கம் முதலாக திருக்கல்யாணச் சருக்கம் றாகப் 11 சருக்கங்களும் அவற்றிற்கான உரைகளும் இடம் பெற்றுள்ளன. முருகன் தெய்வானைத் திருமணச் செய்தியோடு நூல் முடிவடைந்ததாக இதுவரை எண்ணியிருந்தோம். ஆனால் இன்று ஒரு புதிய செய்தி கிடைத்துள்ளது.

தமிழ் மக்களின் வரலாறு, பண்பாடு, நாகரிகம் மற்றும் இலக்கியங்கள் ஆகியவற்றையெல்லாம் விவரிக்கின்ற எத்துணையோ ஓலைச்சுவடிகள் காலததின் கோலத்தால் காணாமல் போய்விட்டன. அறியாமையினால் அழிந்து போனவையும் கரையானுக்கு இரையானவையும் எண்ணிலடங்கா. ஆனால் துழாவூர் ஆதீனத்தின் தமிழ் மற்றும் வட மொழியில் எழுதப்பட்ட பல ஓலைச்சுவடிகள் இன்றும் நல்லமுறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அந்த ஓலைச் சுவடிகளில் திருப்பரங்கிரிப் புராணத்தின் இதுவரை வெளிவராத 12-ஆவது சருக்கமான கிரிசலச்சருக்கம் பற்றிய ஏடுகளும் உரையுடன் இருப்பதைக் கண்ட 29-ஆவது குருமகா சந்நிதானமாகிய ஸ்ரீ நிரம்ப அழகிய ஞானப் பிரகாச தேசிக சுவாமிகள் அப்பகுதியை அச்சுக்குக் கொண்டு வருவதற்கு பெரு முயற்சி மேற்கொண்டார்கள். சுமார் பத்தாண்டுகள் அவர்கள் மேற்கொண்ட முயற்றியின் விளைவாக குருபூஜை விழாவான இன்று திருப்பரங்கிரிப்புராணத்தின் 12-ஆவது சருக்கம் உரையுடன் வெளிவருகின்றது.

கிரிவலச் சருக்கத்தில், திருப்பரங்கிரியை வலம் வருவதால் ஏற்படுகின்ற நன்மைகள், கிரிவலம் வரும் முறைகள், கிாவலம் வந்து பேறுபெற்றவர்களின் விபரங்கள் ஆகிய பல செய்திகள் இடம் பெற்றுள்ளன. இன்றைய காலக் கட்டத்தில் திங்கள்தோறும் பௌர்ணமி அன்று கிரிவலம் வருவது என்பது மக்களிடையே அதிகமாகக் காணப்படுகின்றது. இத்தகைய சூழ்நிலையில் கிரிவலம் பற்றிய செய்திகளை உள்ளடங்கிய இச்சருக்கம் வெளிவருவது பொருத்தமானதே. துழாவூர் குருமகாசன்னிதானம் அவர்களின் முயற்றிக்கும் தலைவணங்கி, நூலைப்படித்துப் பய்ன்பெறுவோமாக.

இவண்

முனைவர் **நா. வள்ளி** M.A.,B.Ed., Ph.D. P.G.Dip in Epl & Arch.,
இணைப்பேராசிரியர், இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி-3

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பதிப்புரை

துழாவூர் ஆதீனத்தின் குடும்பத்தார்கள் ஏட்டுச்சுவடிகளைப் பாதுகாப்பதும், பிரதிகள் செய்து புதுப்பித்து வைப்பதும் வழக்கமாக கொண்டவர்கள். நாமும் அவற்றைப் பேணிப் பாதுகாத்து வருகிறோம். அதன் பயனாக 12-ஆவது கிரிவலச் சருக்கத்தை நாம் ஏட்டைப்பார்த்து எழுதினோம். சரியாகத் தெரியாத இடங்களில் உள்ள ஏழுத்துக்களை அப்படியே வரைந்து வைத்தோம். சுமார் 10 ஆண்டுகளுக்குப் பிறகு திரு. எல். நாகேந்திரசர்மாவை, சுவடியைப் படிக்கச் சொல்லி ஒத்துப் பார்த்து திருத்தங்கள் செய்து மீண்டும் எழுதி வைத்தோம். அதனைக் கண்ட தஞ்சாவூர் சரஸ்வதி மகால் சுவடிப்புல ஆய்வாளர் திரு. எஸ். இளையராஜா, பி.எஸ்.சி., எம்.ஏ., ஏட்டிலுள்ள கிரிவலச் சருக்கத்தை ஜெராக்ஸ் எடுத்துத் தரும்படி கேட்டார் எடுத்துக்கொடுத்தோம். அதை அவர் தஞ்சாவூர். ஸ்ரீ. மீனாட்சி சுந்தரேஸ்வரர் மடம் தவத்திரு. புலவர் சொக்கலிங்க சுவாமி அவர்களிடம் கொடுத்தார். அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எழுதித் தரும்படி கேட்டுகொண்டோம். அவர்களும் எழுதிக் கொடுத்து உதவினார். அதை 27-9-2007 குருபூஜை விழாமலராக வெளியிட்டு மகிழ்கிறோம்.

சைவமும் தமிழும் தழைத்தினிதோங்குக என்றதற்கேற்றவாறு, சைவமில்லாமல் தமிழில்லை, தமிழில்லாமல் சைவமில்லை. முற்காலத்தில் தமிழகத்தை ஆட்சி செய்த மன்னர்கள் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தார்கள் பிறகு சமயகுரவர்களும், சந்தான குரவர்களும் தமிழ் வளர்த்தார்கள். அதனைத் தொடர்ந்து சைவ ஆதீனங்கள் தமிழ் வளர்த்தனர், வளர்த்துக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் நம்மால் முடிந்த பணியாக இதனைச் செய்துள்ளோம்.

இந்நூலுக்கு அழகு சேர்க்குமாப் போல அருள்வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தருளிய திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம், திருப்பனந்தாள் (ஸ்ரீ காசிமடம்) ஆதீனம், குன்றக்குடி ஆதீனம், மதுரை ஆதீனம், சூரியனார் கோவில் ஆதீனம் பெருங்குளம்; செங்கோல் ஆதீனம், திருப்புகலூர்; வேளாக்குறிச்சி ஆதீனம், திருநறையூர்நாச்சியார் கோவில் ஆதீனம், இ, யாழ்பாணம் கரணவாய் வரணிஆதீனம் ஆகியவற்றின் ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானங்களுக்கும் மற்றும் சுவாமிகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் எமது நீண்ட நாள் ஆவல் நிறைவேறுதற்கு உறுதுணையாகயிருந்த தவத்திரு புலவர் சொக்கலிங்க சுவாமி அவர்களுக்கும், முன்னுரை எழுதிச் சிறப்பித்த முனைவர் நா. வள்ளி துணைப்பேராசிரியர் (இராமசாமி தமிழ்க் கல்லூரி) அவர்களுக்கும் இந்நூலுக்கு அச்சுப்பிழை திருத்தம் செய்து உதவிய எமது குமாரன் ஞான. சுந்தரேசன் M.A., B.Ed., M.Phil., தமிழாசிரியருக்கும், எனது குமாரி ஞான. வளர்மதி M.A., T.P.T., தமிழாசிரியைக்கும் இந்நூலை அழகுற அச்சிட்டுக் கொடுத்த திருப்தி அச்சக உரிமையாளர் திரு. மாணிக்கம் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நலமே தழைக.

ஸ்ரீ நிரம்ப அழகிய ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள்
29-ஆவது குருமஹா சந்நிதானம்.
துழாவூர் ஆதீனம் 24-8-2007

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நூல் ஆசிரியர் வரலாறு

திருக்கயிலாய பரம்பரை துழாவூர் ஆதீனம் 19-ஆவது குருமஹா சந்நிதானம், ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய சிதம்பர தேசிக சுவாமிகள் அவர்கள் அருளிச் செய்த நூல்கள் (1) சேதுபுராணம் (2) திருப்பரங்கிரிப் புராணம் ஆகியன, உரை செய்த நூல்கள் (3) திருவருட்பயன் (4) உண்மை நெறி விளக்கம் ஆகியன. இவர்களது உண்மை நெறி விளக்கஉரை சைவ சித்தாந்த சாத்திரங்கள் பயிலத்தொடங்வோர்களுக்கு ஆரம்பப்பாடமாக அமைந்துள்ளது. இவ்விரண்டு புராணங்களும், உரை நூல்களும் செய்தருளியவர் ஒருவரே. இவர்களது வரலாற்றைக் காண்போம்.

இவர்களின் இயற்பெயர் சிதம்பரம். தந்தையார் பெயர் 18-ஆவது ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய சத்திய ஞான தேசிக சுவாமிகள். தாயார் பெயர் தெரியவில்லை என்றாலும் இங்குள்ளவர்கள் வேதராண்யத்தாச்சி என்றழைப்பார்கள். சொந்த ஊர் குன்றக்குடி. இவர்கள் முதற்குமாரர் என்பதால் தாயார் பிறந்த வேதாரண்யம் என்ற ஊரில் சுமார் 1540-ல் பிறந்தவர். படிப்பதற்காக மீண்டும் வேதாரண்யம் சென்று தாய்மாமா வீட்டிலிருந்து படித்தார். இவர் தாய் மாமாவின் பங்காளிகளுள் ஒருவர் திரு. மீனாட்சிசுந்தரதேசிகர் குமாரர் பரஞ்சோதி. இருவரும் தமிழும், சமஸ்கிருதமும் போட்டி போட்டுப்படித்து இருமொழிகளிலும் பெரும் புலவர்களாயினர். இவர்கள் சைவ சமயம். சைவவேளாளர்குலம் சத்தியஞானி கோத்திரம்.

சிதம்பரம் குன்றக்குடிக்கு வந்து தமது தந்தையார் அவர்களிடம் விசேட தீட்சை பெற்றுக்கொண்டார். 11-ஆவது ஸ்ரீ.நி. உதயமூர்த்தி தேசிக சுவாமிகள் உரை செய்த சிவஞான சித்தியார் சுபக்கத்தை புது ஏட்டுச் சுவடியில் எழுதிப் படித்தார். சந்தேகங்கள் தீரவில்லை. திருவாரூருக்குச் சென்று ஸ்ரீ. கமலை ஞானப் பிரகாசதேசிகர் அவர்களிடம் காண்பித்து விளக்கங்கள் பெற்றுத் தெளிந்தார். சித்தாந்த குரு கட்டளைப்படி உண்மை நெறி விளக்கம்.திருவருட்பயன் ஆகிய சாத்திரநூல்களுக்கு உரை செய்துள்ளார். வித்யாகுருவிடம் நன்மதிப்பைப் பெற்றார். இவற்றைப்படித்துவிட்டால் கிரிஞானசித்தியாரைப் படித்துப்புரிந்து கொள்வது சுலபமாக இருக்கும் என்பர். அப்போது இவர்களுடன் பயின்றவர். ஸ்ரீ குருஞான சம்பந்தர் அவர்கள் (தருமபுரம் ஆதீனத்தை நிறுவியவர்).

பிறகு குன்றக்குடி மடம் வந்தபின் இராமேசுவரம் சென்றார். அங்கிருந்த ராமநாதமுனிவர் என்பவர் சமஸ்கிருத ஓலைச் சுவடி ஒன்றைக் கொடுத்து தமிழில் புராணமாகச் செய்யும்படி கேட்டுக்கொண்டார். அதனை ஏற்று சேதுபுராணம் என்னும் நூலை 3438, பாடல்களில் அருளிச்செய்தார். சேதுபுராணம் இராமேச்சுவரத்தில் சுவாமி சந்நிதானத்தில், மதுரைப்பேரரசு மற்றும் தமிழ்ப் புலவர்கள் முந்நிலையில் அரங்கேற்றம் செய்யப்பெற்றது. இவர்களின் சிறப்பை அறிந்த மன்னர் மதுரைக்கு வரும்படி வேண்டுகோள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

விடுத்தார். அத்தை ஏற்று கூடியவிரைவில் வருகிறோம் என்று சொல்லிவிட்டு, குன்றக்குடிக்கு வந்து தமது குமாரர் ஸ்ரீ.நி.தாண்டவேசுவரருக்கு நிர்வாண தீட்சையும் ஆசாரிய அபிடேகமும் செய்து வைத்து, ஆதீனத்தின் 20-வது பட்டமாக்கி வைத்துப் பொறுப்புக்களை எல்லாம் ஒப்படைத்து விட்டு, மதுரைக்குச் சென்றார். பாண்டிய மன்னர் இவர்களை வரவேற்று உபசரித்துத் திருப்பரங்குன்றத்தில் தங்க மடமும், ஜீவனத்திற்குக் கிராமங்களும் வழங்கி அன்பு செலுத்தி ஆதரித்து வந்தார். இவர்களுடன் பயின்ற திரு. பரஞ்சோதி முனிவர் மதுரையிலிருந்து திருவிளையாடல் புராணம் அருளிச் செய்தார்.

குன்றக்குடியிலிருக்கும் போது தினமும் மலை ஏறி ஸ்ரீ சண்முகநாதசுவாமியை வழிபாடாற்றி வருவது வழக்கம். அது போல திருப்பரங்குன்றத்திலும் மலை ஏறி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமியையும் வழிபாடாற்றி வருவார்கள். அங்கு இவர்களுக்கு இறையருளால் சமஸ்கிருத ஓலைச் சுவடிகள் கிடைத்து. அதில் திருப்பரங்கிரி மான்மியத்தை சூத முனிவர் சொல்லியருளியது என்றிருந்தது. அச்சுவடியைக் கொண்டு, இவர்கள் திருப்பரங்கிரிப்புராணம் என்ற பெயரில் தமிழில் 579 பாடல்களைக் கொண்ட நூலாகச் செய்தருளினார்கள். இப்புராணத்திற்கு மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான் மு.ரா. அருணாசலக்கவிராயர் அவர்கள் உரை செய்துள்ளார். 1 முதல் 11 சருக்கங்கள் வரை அச்சுப்புத்தகமாக 1928-ல் வெளிவந்துள்ளது. 12-வது கிரிவலச்சருக்கம் வெளிவரவில்லை.

எங்கள் குடும்பத்தில் பாதுகாத்து வைத்திருந்த ஏட்டுச் சுவடியில் 1 முதல் 12 சருக்கங்கள் வரை முழுமையாகயிருக்கிறது. அதில் திருப்பரங்குன்றம் ஆறுகாற்பீடம் வயிரவம் அம்பலவாணபாரதி என்பவர் கி.பி. 1833-ம் வருடம் உரை சொல்லி நிறைவு செய்துள்ளார். அதில் 12-ஆவது கிரிவலச் சருக்கம். 53 பாடல்களும் உரையுடன் இருக்கிறது. இதுவரை வெளிவராத பகுதியை மட்டும் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இவர்களின் சீடர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் (1). தமது குமாரர் (2) திரு. அளகை சம்பந்த முனிவர் (திருவாரூர் புராணம் அருளிச்செய்தவர்) (3) திரு. ஞானக்கூத்தர் (திருவையாற்றுப்புராணம் அரளிச் செய்தவர்) இவர்களது அருளாட்சிக்காலம் கி.பி. 1597 முதல் 1629 ஆண்டுவரை. குன்றக்குடி-மதுரை-திருப்பரங்குன்றம் ஆகிய தலங்களிலும் வாசம் செய்தவர்கள். மார்கழி - பௌர்ணமி திதியில் சிவசாயுச்சிய முத்தி பெற்றார்கள்.

சுபம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குரு முதல்வர்

சற்குரு ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிக பரமாசாரிய சுவாமிகள்



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



19-ஆவது குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய

சிதம்பர தேசிக சுவாமிகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

28-ஆவது குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ நிரம்ப அழகிய பாலஉதயபூர்த்தி

குருக்கள் அவர்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருக்கயிலாய பரம்பரை - துழாவூர் ஆதீனம்

29-ஆவது குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய

ஞானய்யிரகாச தேசிக பரம ஆசாரிய

சுவாமிகள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருக்கயிலாய
பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
சீர் வளர் சீர் ஆதீனகர்த்தரவர்கள்

அருள் வாழ்த்துரை

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!

நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டு மே. - அப்பர் தேவாரம்.

ஸ்ரீ கமலை ஞானப்பிரகாச தேசிகரின் மாணாக்கரும், தருமபுர ஆதீனக் குருமுதல்வருடன் இணைந்து பயின்றவர்களும் ஆகிய துழாவூர் ஆதீனம் 19-வது குரு மகா சந்நிதானம் ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய சிதம்பர தேசிக சுவாமிகள் அருளிச் செய்த திருப்பரங்கிரிப் புராணம் 12-வது சருக்கம் இவ்வாண்டு மகா குருபூசை விழா மலராக உரையுடன் வெளிவர இருப்பது அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம்.

இதுகாணும் கிடைக்காமல் இருந்த திருப்பரங்கிரிப் புராணத்தின் 12-ம் சருக்கம் ஏறத்தாழ 400 ஆண்டுகளுக்குப் பின்னர் 29-வது குரு மகா சந்நிதானம் அவர்களின் முயற்சியால் கிடைத்திருப்பது திருவருளால் கிட்டியுள்ள சிறந்த பேறாகும்.

அடியார்களெல்லாம் திருப்பரங்கிரிப் புராணத்தினை நன்முறையில் ஓதி சிவநெறி நின்று சித்தாந்த மெய்ஞ்ஞானம் பெற்றுச் சிறந்துய்ய வேண்டுமென நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

திருக்கயிலாய
சீர் வளர் சீர் ஆதீனகர்த்தரவர்கள்
பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கயிலை மாமுனிவர்
திருவளர்திரு காசிவாசி முத்துக்குமாரசுவாமித்
தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
அதிபர், காசித்திருமடம்.

வாழ்த்துரை

வேத நாயகன் வேதியர் நாயகன்
மாதின் நாயகன் மாதவர் நாயகன்
ஆதி நாயகன் ஆதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே
- ஆதி புராணத் திருக்குறுந்தொகை

மக்கட் பிறப்பெடுத்த ஆன்மாக்கள் அனைவரும் நல்வழியைப் பின்பற்றி உய்யத் துணை செய்வன புராணங்கள். அரனின் அருளையும், ஆற்றலையும் பொதுநிலையில் பதினெண் புராணமும், அதனோடு தலச்சிறப்பு, வழிபட்டு உய்ந்தோர், மக்கள் பின்பற்ற வேண்டியவை எனச் சிறப்பு நிலையில் விளக்குபவை தல புராணங்கள்.

திருப்பரங்கிரித் தல புராணத்தின் முழுச் சிறப்பினையும் மக்கள் உய்யத் திருவருளும் குருவருளும் முன்னின்று உணர்த்த என்பத்துஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு எஞ்சிய பகுதிகளோடு அச்சிட்டு முழுமையாக வெளியிட இருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறோம்.

ஆதீனத்தின் 19-வது குருமூர்த்திகள் மொழிபெயர்த்து நமக்கு அருளிய நூலைக் குருபூஜை விழாவில் மலரச் செய்வது திருவருள் பொருத்தத்தையும் நூலின் சிறப்பினையும் உணர வழி செய்வதாக உள்ளது.

குருபூஜை விழாவும், நூல் வெளியீட்டு விழாவும், விழுமிய பயன் தரத் தக்கதாய் அமையச் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

கயிலை மாமுனிவர்
திருவளர்திரு காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்
சுவாமிகள், அதிபர், காசித்திருமடம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தவத்திரு
குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள்
குன்றக்குடி - 630 206
சிவகங்கை மாவட்டம். போன் 04577 - 264227

வாழ்த்துரை

துழாவூர் ஆதீனம் 19-ஆவது குருமகா சந்நிதானம் திருவருள்திரு நிரம்ப அழகிய தேசிக சுவாமிகள் அருளிச் செய்த திருப்பரங்கிரிப் புராணம் 12-ஆவது கிரிவலச் சருக்கம் 53 பாடல்களும் உரையுடன் இந்த ஆண்டு மகா குருபூசை விழா மலராக துழாவூர் ஆதீனம் வெளியிட இருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி. திருவருள்திரு நிரம்ப அழகிய தேசிக சுவாமிகள் சிவஞானச் செல்வராக விளங்கியவர். திருவருட்பயன், உண்மை நெறி விளக்கம் ஆகிய சித்தாந்த சாத்திர நூல்களுக்கு உரைகண்ட தத்துவ வித்தகர். சேது புராணம் திருப்பரங்கிரிப்புராணம் ஆகிய தலபுராணங்களை இலக்கியச் சுவையும், பக்திச்சுவையும் நனி சொட்டச் சொட்டப் பாடிய பெருங்கவிஞர். இத்தகைய ஞானச்செல்வர் பாடிய திருப்பரங்கிரிப்புராணம் 12-ஆவது கிரிவலச் சருக்கம் உரையுடன் நூல் வடிவம் பெற்று வெளிவருவது சைவத் தமிழ் உலகுக்குக் கிடைத்த தமிழ்ப் புதையல் ஆகும். வெளியீட்டு விழா இனிதே நிறைவெய்த திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

இங்ஙனம்
தவத்திரு. குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

புனித மிக்க

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரியார்

292 ஆவது குருமகாசன்னிதானம் ஆதீனகர்த்தர் மதுரை ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ மகாசன்னிதானம் அவர்கள் திருமுன்பிற்குத் திருவருளைச் சிந்தித்து எழுதிக் கொள்வது. அவ்விடமிருந்து அனுப்பிய 15-08-2007 ஆம் நாளிட்ட திருமுகம் கிடைத்து மகிழ்ச்சியடைந்தோம். 19-ஆவது பட்டம் நிரம்ப அழகிய தேசிகராகிய சிதம்பர தேசிக சுவாமிகள் அருளிச் செய்த திருப்பரங்கிரிப் புராணம் 1 முதல் 12-ஆவது கிரிவலச் சருக்கம் வரை நல்உரையுடன் இவ்வாண்டுக் குருபூஜை மலராக வெளிடப் பெறுவதறிந்து மகிழ்கின்றோம்.

இந்நூல் சிறப்பாக வெளிவரட்டும். நம் மக்கள் மெய்மை நிலை அறிந்து, பரிபக்குவம் பெற்றிடத் திருவருள் பாலிக்கட்டும்.

ஆதீனத் தொடர்புடைய மக்கள் அனைவரும் "மண்ணில் நல்ல வண்ணம்" வாழ்ந்திடவும், ஆதீனத்தின் சைவ சமயப் பணிகள் என்றென்றும் சிறந்து விளங்கிடவும், நமது நிரந்தரத் தாய் தந்தையாகிய சிவபெருமான் - பார்வதி தேவியரைப் பிரார்த்திக்கின்றோம்.

எல்லோர்க்கும் நமது நல்லாசிகளைத் தொவிக்க விரும்புகின்றோம்!.

21-08-2007

ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருக்கயிலாய பரம்பரை செங்கோல் ஆதீனம்
102வது குருமகா சந்நிதானம்
ஸ்ரீ ல ஸ்ரீ கல்யாண சுந்தர சத்தியஞான பண்டார சந்நிதி சுவாமிகள்
ஆதீன கர்த்தர் செங்கோல் ஆதீனம்
பெருங்குளம் - 628 752. தூத்துக்குடி மாவட்டம்.
போன் : 04630 - 271411

அருள் வாழ்த்துரை

ஸ்ரீ ல ஸ்ரீ குருமகா சந்திதானம் அவர்கள் திருமுன்புக்கு துழாவூர் திருமடம்.

குருமகா சந்நிதானம் திருமேனி நலத்திற்கு திருவருளை சிந்திக்கின்றோம்.

நமது 15-8-2007 திருமுகமும் குருபூஜை அழைப்பிதழும் கிடைக்கப்பெற்றோம்.

நமது ஆதீனம் 19-வது குருமகா சந்நிதானம் சுவாமிகள் அருளிச் செய்த திருப்பரங்கிரிப்புராணம் திரு அருணாசலக் கவிராயர் அவர்கள் எழுதிய உரை ஒன்று முதல் பதினொரு சருக்கங்கள் 1928ல் அச்சுப் புத்தகமாக வெளிவந்துள்ளதை அறிகின்றோம். 12-வது சருக்கமான கிரிவலச் சருக்கம் 53 பாடல்களுடன் உரையுடன் 27-9-2007ல் அன்று விழா மலராக வெளியீடு செய்யும் முயற்சியைப் பெரிதும் பாராட்டுகின்றோம்.

இம்மலர் நன்கு மலர்ந்து திக்கெட்டும் திரு மணம் கமழ்ந்து பரவட்டும். இதைப் படித்து பயன்பெறுகின்ற நல்உள்ளங்கள் பேரானந்தப் பெருவாழ்வு பெற்றுய்யட்டும்.

நமது ஆதீனத்தின் நல்ல அருட்பணிகள் மேன்மேலும் சிறந்து வளர்ச்சியுடன் உயர்ச்சி பெற நம் ஆன்மார்த்த மூர்த்தியாகிய அருள்மிகு அழகிய திருச்சிற்றம்பலமுடையான் திருவருளை சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீ ல ஸ்ரீ கல்யாண சுந்தர சத்தியஞான பண்டார சந்நிதி சுவாமிகள்
திருக்கயிலாய பரம்பரை செங்கோல் ஆதீனம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருக்கயிலாயப் பரம்பரை வேளாக்குறிச்சி ஆதீனம்
குருமகா சந்நிதானம்
ஸ்ரீ ல ஸ்ரீ சத்தியஞான மகாதேவ தேசிக பரமாசாரிய சுவாமிகள்
வேளாக்குறிச்சி ஆதீனத்திருமடம், நாகை மாவட்டம்.
மொபைல் - 94431 13025

ஆசியுரை

"மைத்தகு மேனி வாளரக்கன் தன் மகுடங்கள்
பத்தின தின்தோள் இருபதும் செற்றான் மரக்குன்றை
சித்தமது ஒன்றி செய்கழல்உன்னி சிவன் என்று
நித்தலும் ஏத்தத் தொல்வினை நம்மேல் நில்லாவே"
- ஆளுடைய பிள்ளையார்

எல்லாம் வல்ல எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் சிவபரம்பொருள் எழுந்தருளி அருள்பாலிக்கும் பல திருத்தலங்களில் பாண்டி நாட்டில் திருப்பரங்கிரி எனும் திருப்பரங்குன்றம் குமரவேள் தெய்வானை நாயகியை மணம்கொண்டு அருள்தரும் சிறப்புடையதாகும். 1928-ல் முதல் பதிப்பாக பதினொரு சருக்கங்களுடன் வெளியிடப்பட்ட இந்நூலில் பனிரெண்டாவது சருக்கத்தையும், உரையையும் தனியாக முழு வடிவில் வெளியிடப்படவிருப்பதை அறிந்து மிக்க மகிழ்வெய்துகிறோம்.

பண்டை நூலாக திருப்பரங்கிரி புராணம் வெளியீடு தமிழ்மொழியில் சிறப்பினையும் சைவத்தின் மாண்பினையும் உலகறிய உதவிடும் என்பதில் ஐயமில்லை. தொன்மையான துழாவூர் ஆதினத்தில் நிகழும் குரு பூசை விழாவில் இந்நூல் வெளிவருவது சால பொருத்தமுடையது, ஞானதானத்தின் சிறப்பை உணர்த்துவது இவ்விழாவில் பங்கேற்போரும் இந்நூல் வெளியீட்டிற்கு உறுதுணைபுரிந்தோரும் எல்லா நலன்களும் பெற்று நீடு இனிது வாழ ஸ்ரீ அஜபா நடனத் தியாகேசப் பெருமானின் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

ஸ்ரீ ல ஸ்ரீ சத்தியஞான மகாதேவ
தேசிக பரமாசாரிய சுவாமிகள்
வேளாக்குறிச்சி ஆதீனத்திருமடம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸ்ரீலஸ்ரீ மருதவாண தேசிகர் அவர்கள்
நாச்சியார்கோயில் ஆதீனம், வள்ளல் சந்தான மடம்,
திருநயூர், நாச்சியார் கோயில் போஸ்ட் 612 602

வாழ்த்து மடல்

தங்கள் இல்லத்தில் இருந்து கண்டு பிடித்துள்ள ஏட்டுச் சுவடியில் இருந்து தங்கள் முன்னோர்களில் ஒருவரும், தங்கள் ஆதீனத்தின் 18-ஆவது பட்டம் சத்திய ஞான தேசிகர் அவர்களுக்கும் வேதாராண்யத்தாச்சி அவர்களுக்கும் திருக்குமாரராக அவதரித்தவரும், கமலை ஞானப் பிரகாச தேசிகரையும் வித்யா குருவாக கொண்டவரும் தருமை ஆதீனத்து குருமுதல்வர் ஸ்ரீ ல ஸ்ரீ குருஞானசம்பந்தர் அவர்களையும், திருவிளையாடல் புராணம் இயற்றிய பரஞ்சோதி முனிவர் அவர்களையும் உடன் பயின்றவர்களாகவும் தங்கள் ஆதீனத்தின் 19-ஆவது பட்டமாக அருள்ஆட்சி செய்தவர் களாகிய ஸ்ரீலஸ்ரீ சிதம்பரதேசிக சுவாமிகள் அவர்களால் அருளிச் செய்த திருப்பரங்கிரிப் புராணம். 12-ஆவது சருக்கம் ஆகிய கிரிவலச்சருக்கம் (முன்பு அச்சில் வெளிவந்தது போக, மீதமுள்ள உரையுடன் கூடிய 53 பாடல்களையும், புத்தகமாக அச்சிட்டு தங்கள் ஆதினத்தின் ஆதீ குருமுதல்வராகிய ஸ்ரீலஸ்ரீ நிரம்ப அழகிய தேசிக சுவாமிகளின் மஹா குருபூஜை தினமாகிய எதிர்வரும் 27-9-2007 அன்று தங்களால் வெளியடப்படுவது மிகவும் சிறப்பான காரியம் ஆகும். மேற்படி பரம்பரையில் வந்தவராகிய தங்களால் தங்கள் முன்னோர்களான 19-ஆவது பட்டம் அருளாட்சி செய்தவரும் திருப்பரங்கிரிப்புராணம் இயற்றியவரும் கி.பி. 1544 முதல் 1629 வரை 85 வயது வரை வாழ்ந்தவரும், கி.பி 1597 முதல் 1629 வரை அருளாட்சி செய்தவரும், திரு. அளகை சம்பந்த முனிவரையும், திரு. ஞானக் கூத்தரையும் சீடர்களாக கொண்ட ஸ்ரீலஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய சிதம்பர தேசிக சுவாமிகள் இயற்றிய கிரிவலச் சருக்கத்தின் 53 பாடல்களையும் அச்சிட்டு சீரும் சிறப்புமாக சைவ சமயத்திற்கும் தமிழ் அன்பர்களுக்கும் உதவ வேண்டி அமைய எமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய சிதம்பரேச மூர்த்தியை திருவடி தொழுது வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீ ல ஸ்ரீ மருதவாண தேசிகர்
நாச்சியார்கோயில் ஆதீனம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இ. யாழ்பாணம் கரணவாய்வரணி ஆதீனம்
62, மேலவீதி, வேதாரண்யம்.
போன் 04369 - 251092

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

எம்பெருமான் எல்லாம் வல்ல மறைக்காட்டுறையும் ஸ்ரீ வீணாவாத விதூஷணி அம்பாள் சமேத ஸ்ரீ வேதாரண்யேஸ்வரனை வணங்கி தங்கள் இஷ்ட தெய்வங்களையும் வேண்டி தாங்கள் பூரண நலத்துடன் இருந்து திருப்பரங்கிரிப் புராணத்தின் ஒன்று முதல் பதினொரு சருக்கங்களை 1928ல் வெளியிடப்பட்ட தன் மீதப் பகுதியான 12-வது சருக்கமான கிரிவலச் சருக்கம் 53 பாடல்களும் உரையுடன் சரிவர வெளியிடுவதில் முனைப்புடன் இருப்பது அறிந்து மிக்க மகிழ்வுறுகின்றோம்.

தங்கள் சீரிய முயற்சியில் வெளியீடு யாவர்க்கும் பயன்பெறவும், வெற்றி அடையவும் வரணி ஆதினத்தின் சார்பில் மனமார்ந்த ஆசீர்வாதங்கள்.

க. செவ்வந்திநாத பண்டார சந்நிதி
பரம்பரை தர்மகர்த்தா

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தவத்திரு. புலவர். சொக்கலிங்க சுவாமிகள்
மடாதிபதி & இயக்குநர்
மீனாட்சி சுந்தரேசுவரர் திருமடம்
இலவசத் தேவாரப் படாசாலை,
தஞ்சை சிவனடியார் திருக்கூட்டம், 8/16, தத்தோஜியப்பா சந்து,
தஞ்சாவூர் 613 001.

அருளாசியுரை

நீலமா மிடற்று ஆல வாயிலான்
பாலதாயினார் ஞாலம் ஆள்வரே - சம்பந்தர்.

'அடுத்து முயன்றாலும் ஆகும் நாளன்றி எடுத்த கருமங்கள் ஆகா' என்பதற்கிணங்க ஆகும் நாள் 27-9-2007. 79 ஆண்டுக்குப்பின் 29-ஆவது குருமகா சந்நிதானம் அவர்களால் தான், திருப்பெருந்திரு நிரம்ப அழகிய தேசிக சுவாமிகள் அவர்களின் மகாகுருபூசை நாளில், துழாவூர் ஆதீனம் 19-ஆவது குருமகா சந்நிதானம் அவர்கள் அருளிச் செய்த "திருப்பரங்கிரிப் புராணத்தின் 12-வது கிரிவலச்சருக்கம்" வெளிவர வேண்டும் என்பது இறைவன் சித்தம் போலும்.

இதற்கு முன்பெல்லாம் கிரிவலம் வந்து இறைவனை வணங்குவது, பழனிமலை, திருவண்ணாமலை முதலான மலைகளைச் சுற்றி கிரிவலம் வருவது அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்து வந்தது. இதன் பலன் அறிந்த மக்கள், மலை அல்லாத திருக்கோயில்களிலும் முழுநிலா அன்று கிரிவலம் வருவது அதிகரித்து வருகிறது.

இந்த அரிய காலத்தில் "கிரிவலச் சருக்கம்" வெளிவருவது பொருத்தமானதே. மேலே கவனித்தால் எல்லாம் 9-ல் அமைந்துள்ளது அருமையாக உளது.

பேரார்வத்துடன் ஒரே முச்சாக இருந்து அரிதின் முயன்று இந்த கிரிவலச்சருக்கத்தை வெளியிட்ட நம் பாசத்துக்கும் பாராட்டுக்கும் உரிய சீர் வளர் சீர் நிரம்ப அழகிய தேசிகராகிய ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கட்கு நம் பாராட்டும் வாழ்த்து உரித்தாகிறது.

"திருப்பரங்கிரிப்புராண"த்தினை அருளிச்செய்த 19-வது பட்டம் சுவாமிகட்கு நம் மகிழ்ச்சி வணக்கங்கள் உரித்தாகின்றன. இவ்வாறு அரிதின் முயன்று வெளிவந்த "கிரிவலச்சருக்க"த்தினைப் பெற்றுப் பயனடைவோர் ஆலவாய்ச் சொக்கன் திருவருளால் வாழ்க்கையில் மேன்மேலும் உயர்ந்து மகிழ்வெய்த வேண்டுமென அருளாசி வழங்குகின்றோம்.

திருப்பெருந்திரு.
சொக்கலிங்கசுவாமிகள் மடாதிபதி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கயிலை மாமுனிவர் வித்துவான்
சாந்தலிங்க இராமசாமியடிகள்
பேரூராதீனம், பேரூர் (அஞ்சல்)
கோயமுத்தூர் - 641 010. தமிழ்நாடு
போன் 2607995, 2608678

அருள்மிகு சாந்தலிங்கப் பெருமான் இன்னருள் பெருகுக.

வாழ்த்து

1. திருப்பரங்குன்றம் முருகவேள் அருள்சேர் வியன் தமிழ்த்
திருத்தலமாகும்.
அருள்நிறை மேலோர் போற்றும் அத்தலத்தின் புராணத்தை
அளித்தவர் திருமுறை நெறியில்
பொருள் பொதி நிரம்ப அழகியராகச் சிதம்பர தேசிகர் பெண்கள்
குருவருள் பீடம் துழாவூர் மடத்தின் குலவிய அருள்நெறித்
தலைவர்

2. செந்தமிழ் நெறியின் சிவவழிபாட்டின் தேசிகராகியே துழாவூர்
சிந்தனை வளம் சேர் பத்தொன்பதாம் பட்டம் சிதம்பரதேசிகர்
அருளால்
தந்ததாம் புராணக் கிரிவலச் சருக்கம் உரையுடன் தமிழ் நலம்
சிறக்க
வந்தனைக்குரிய ஞானப்பிரகாசர் மாண்புறத்தந்தனர் வாழி.

தவத்திரு நிரம்ப அழகிய ஞானப்பிரகாச தேசிக சுவாமிகளுக்கு, மடல் கிடைத்தது, திருப்பரங்கிரி தலபுராணம் கிரிவலப்படலம் குருபூசை விழா மலராக வருவது மகிழ்ச்சிக்குரியது. மலர் சிறக்க வாழ்த்துக்கள்.

அன்புடன்
சாந்தலிங்க இராமசாமியடிகள்,
பேரூராதீனம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருக்கயிலாயப் பரம்பரை சைவ ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள்
அப்பர் சுவாமிகள் திருமடம்
சேலம் மெயின் ரோடு, மூலசமுத்திரம் அஞ்சல்

துழாவூர் மடம் 19-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய சிதம்பர தேசிக சுவாமிகள் அருளிச் செய்த திருப்பரங்கிரிப்புராணம் என்னும் நூலின் 12-ஆவது கிரிவலச்சருக்கம் உரையுடனும் நூலாசிரியர் வரலாற்றுடனும் தற்போதைய 29-ஆவது குருமகா சந்நிதானமும் ஆதீன கர்த்தருமாகிய ஸ்ரீலஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் இவ்வாண்டின் மஹாகுருபூஜை மலராக வெளியிடுவது குறித்து அன்னாரைப் பாராட்டும் வகையில் மனமகிழ்வுடன் வாசித்தளித்த

வாழ்த்துப்பா

1. வற்றதாவரம் நல்கும் வல்லப கணபதியை
வணங்கித் துதித்து வாழ்த்துப் பாவிசைக்க
வந்தருள வேண்டும் எனது நாவிலென
வாயாரத் துதித்து வேண்டு கின்றனம்.

2. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மக்கட்குப்
பயனுள்ள நீதிகள் பலவற்றைக் கூறுதற்போல்
பதினெட்டு மடங்களில் துழாவூர் மடம்
பக்தர்களை நல்வழிப் படுத்து கின்றன.

3. தன்னிடம் தஞ்சமுற்ற புறாஒன் றிற்காக
தன்தசையை அரிந்து தராசில் இட்ட
தன்னலம் அற்ற சிபிச்சக்ர வர்த்தி
தரணி தன்னில் புகழ்பெற் றதுபோல்

4. தம்மடம் நாடி வந்திட்ட மக்களை
தவக்கம் ஏதுமின்றி நல்வழிப் படுத்தும்
தவம்மிக்கத் தம்பிரான்கள் துழாவூர் மடத்தில்
தண்ணளி யொழியத் தகவுடன் உள்ளனர்.

5. துழாவூர் மடம் துலாக்கோல் போல
துல்லிய முடனே ஆராய்ந் தறிந்து
தூய்மை வழியில் மக்கள் செல்ல
துணைசெய் கின்றது உண்மை உண்மை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

6. துழாவூர் ஆதீனம் தொன்மை வாய்ந்தது
தூய்மை உடைய இவ்வாதீ னத்தின்
தோழமை மிக்க பத்தொன் பதாவது
தொய்வற்ற குருமகா சந்நி தானம்.

7. ஸ்ரீநிரம்ப அழகிய தேசிகராம் சிதம்பர
ஸ்ரீதேசிக சுவாமி யவர்கள் அருளிய
ஸ்ரீதிருப் பரங்கிரிப் புராணம் என்பது
ஸ்ரீபுகழ் பனிரெண்டு சருக்கம் கொண்டது.

8. முதற் சருக்கம் தொடங்கிப் பின்னர்
முறையே பதினோரு சருக்கம் வரையிலும்
முழுமை பெற்ற உரையுடன் நன்கு
முன்னம் சென்ற நூற்றாண் டாகிய

9. ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத் தெட்டில்
அழகிய அச்சுப் புத்தக வடிவில்
அமைந்து வந்தது போற்றத் தக்கது
ஆயினும் அடுத்த இறுதிச் சருக்கம்

10. இந்நாள் வரையிலும் வெளியிட வில்லை
இதுஒரு குறையாக இருந்து வந்ததை
இனியும் தொடர விரும்பாத நமது
இன்றைய இருபத்தொன்பதாம் சந்நிதானம்

11. ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ நிரம்ப
அழகிய தேசிக சுவாமி ஆதீனம்
அறத் தூய்மை பூண்டு அறுதியிட்டு
ஆவன செய்யவும் திட்ட மிட்டனர்.

12. நூலாசியர் வரலாற்றை நுண்ணிய முறையில்
நுகரும் வகையில் அமைத்து நூலினை
நெகிழ்ந்து வெளிட விரும்பிய நீங்கள்
நீடுழி காலம் வாழி வாழி

13. திருப்பரங் கிரிப் புராண நூலின்
திகட்டாத சருக்கமாம் பன்னி ரெண்டாவது
தெள்ளிய கிரிவலச் சருக்கம் உங்களால்
தெற்றென வருவது போற்றத் தக்கது.

14. இவ்வெளியீ டிவ்வாண்டு செப்டம்பர் திங்கள்
இறுதி வாரம் இருபத்தி ஏழாம்
இனிய நன்னாளில் குருபூஜை மலராக
இன்முகம் கொண்டு எழிலுடன் வருகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

15. பத்தொன் பதாம் குருமகா சந்நிதானம்
பரம்பரை தன்னில் வந்துள்ள நீங்கள்
பாசமுடன் இதனை வெளியிட வைத்தது
பாராட்டத் தக்கது பாண்டித்யம் பெற்றது

16. தொல்புகழ் வாய்ந்த துழாவூர் மடம்
தொய்வின்றி எந்நாளும் தொன்மரம் போன்று
தோகை விரித்தாடும் மயில்போல் மகிழ்வுடன்
தோற்றம் பெற்றிட வாழ்த்து கின்றனம்.

17. இருபத் தொன்பதாம் குருமகா சந்நிதானம்
இகழ்தல் இல்லா ஆதீன கர்த்தர்
இகபர சுகங்கள் அனைத்தும் பெற்று
இடுக்கண் இன்றி வாழ்க வாழ்க

18. சிதம்பர தேசிக சுவாமிகள் வரிசையில்
சீரும் சிறப்புமாய் வாழ்ந்திடும் நீவிர்
சிவனருள் மற்றும் சிவையருள் பெற்று
சீர்த்தியுடன் சிகரம் போல் என்றும் வாழி

19. திருப்பரங் கிரிப் புராணம் தன்னின்
தடாகம் போன்ற பனிரெண்டாம் சருக்கத்தின்
தீவகம் போன்ற கிரிவலச் சருக்கம்
தெளிவுடன் வருவது திண்மை மிக்கது.

20. இந்தப் பெருமை அனைத்தும் உம்மை
ஈர்க்கும் தன்மைப் பெற்றது ஆகும்
இறவாப் புகழுடன் என்றும் வாழ
இறைவனை யாமும் இறைஞ்சு கின்றனம்.

வணக்கம்

இங்ஙனம்
தவத்திரு ஸ்ரீலஸ்ரீ
சிவஞான தேசிக சுவாமிகள்
ஸ்ரீ அப்பர் சுவாமிகள் மடம்
உளுந்தூர்பேட்டை - 606 107

இடம் : துழாவூர்

நாள் : 27-9-2007

கருத்தும் கவிதாக்கமும் புனைந்தவர்

ஸ்ரீகாளத்தி எம்.ஏ., எம்.எட்.,
தமிழ்நாடு அரசு நல்லாசிரியர் விருது பெற்ற
அரசினர் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் (ஓய்வு),
37 மண்டபத்தெரு, பிள்ளையார்பாளையம், காஞ்சிபுரம் - 631 501.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருப்பரங்கிரிப்புராணம்
ஆசிரியர் குறிப்பு

இயற்பெயர்	: சிதம்பரம்
சிவதீட்சைப்பெயர்	: சிதம்பர தேசிகர்
ஆதீன அதிபரான பெயர்	: ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய சிதம்பர தேசிக சுவாமிகள்(19–வது பட்டம்)
தந்தை பெயர்	: ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய சத்திய ஞானதேசிகர் (18–வது பட்டம்)
தாயார் பெயர்	: வேதாரண்யத்தாச்சி என்று வழங்குவர்
சொந்த ஊர்	: குன்றக்குடி, (சிவகங்கை மாவட்டம்)
படித்த ஊர்கள்	: 1. வேதாரண்யம் – தமிழும், வடமொழியும் 2. திருவாரூர் – சைவ சித்தாந்த சாத்திரங்கள்
தீட்சா குரு	: தமது தந்தையார்
வித்யா குரு	: ஸ்ரீ கமலை ஞானப்பிரகாச தேசிகர் அவர்கள்
இயற்றிய நூல்கள்	: 1. சேதுபுராணம், 2. திருப்பரங்கிரிப்புராணம்
உரை செய்த நூல்கள்	: 1. திருவருட்பயன், 2. உண்மை நெறிவிளக்கம்
காலம்	: கி.பி. 1540 முதல் 1629 வரை (89 வயது)
தந்தைக்குப்பின் ஆதீன அருளாட்சிக்காலம்	: கி.பி. 1597 முதல் 1629 ஆண்டு வரை
உடன் பயின்றவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்	: 1. ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்த தேசிக சுவாமிகள் (நிறுவனர், தருமபுர ஆதீனம்) 2. ஸ்ரீ பரஞ்சோதி முனிவர் (திருவிளையாடல் புராணம் இயற்றியவர்)
சீடர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்	: 1. திரு. அளகை சம்பந்தமுனிவர் (திருவாரூர் புராணம் இயற்றியவர்) 2. திரு. ஞானக்கூத்தர் (திருவையாற்றுப்புராணம்)
சைவ சமயதீட்சை பெற்றவர்கள்	: நாட்டுக்கோட்டை நகரத்தார் பெண்கள் சைவர்களில் ஆண், பெண்– இருபாலரும்
மூவகை தீட்சைகளும் ஆசாரிய அபிடேகமும் பெற்றவர்	: தமது குமாரரும், ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய தாண்டவேசுவர தேசிக சுவாமிகளுமான 20–வது பட்டம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

சிவமயம்

திருப்பரங்கிரிப்புராணம்

12-ஆவது கிரிவலச்சருக்கம்

1. சிவபரங்கிரி மான்மியத் தமுதிரு செவிவாய்ச்
சுவைபுகட் டினையாஞ் சிவானந்தமே சுகித்தோங்
குவசெவ்விய மகிமையைச் சொல்லென முனிவோர்
புவியுறப் பணிந்தெழுந்தனர் சூதரும்புகல்வார்.

என்றது: பாண்டி தேசத்திலே மதுராபுரிக்கு நிருதி பாகத்திற் சிவபரங்கிரி. அதின் மகத்துவமான அமுதத்தை எங்கள் இரண்டு காதின் வாயினிடமாகக் கதையினுடைய சாரத்தைக் கிருபையுடனே திருவாக்கினாலே சொன்னதை நாங்கள், அந்தக் கதையினுடைய மகிமையை அறிந்து சிவானந்த போதத்திலே இருக்கிறோம்.

இனிமேல் அந்தச் சிவபரங்கிரியைப் பிரதெட்சணம் வருகிற மகிமையைச் சொல்ல வேணுமென்று நைமிசாரணிய ரிஷிகள் அனைவரும் பூமியினிடத்திலே சாஷ்ட்டாங்கமாகத் தெண்டன் பண்ணி, எழுந்து நிற்கவும், சூதமகாரிஷியானவர் சொல்லுவார் என்றவாறு

வேறு

2. சீர்கெழு கயிலைக் கண்ணல்
சிறுசிறார் சுவாமிநாதன்
ஓர்மொழி யுரைப்ப வாசா
னுரைபெறா தபசா ரத்தைப்
பார்கெழு பரங்குன் றத்திற்
பரனெனைப் பதிட்டை பண்ணி
ஓர் பொழு தருச்சிப் பாய்நா
முதவுவஞ் சகள ரூபம்

எ.து: அதிக அழகு பிரகாசிக்காநின்ற கயிலாய கிரிக்குக் கர்த்தாவாகிய பரமசிவன் குழந்தைகளில் சிறுகுழந்தையான சுவாமிநாதன், பரமசிவனுக்கு ஒரு மந்திரம் உபதேசம் பண்ணவும், அதைப் பரமசிவன் கேட்டுக் கொண்டு குழந்தாய் நீ இந்த மந்திரங் குருவினாலே அனுக்கிரகம் பெற்று, ஒருவருக்கும் சொல்லாமல் நீதானே கேட்டிருந்த மந்திரத்தை எனக்கு அனுக்கிரகம் பண்ணினபடியினாலே உனக்கு அபசாரம் உண்டாச்சுது.

ஆனதாலிந்த பாவந் தீருதற்கு உலகத்திலே அதிக மகிமையான பிரகாசமுடைய திருப்பரங்குன்றத்துக்கு எழுந்தருளிப் பரமசிவனான என்னை அந்த மலைக்குள்ளே பிரதிட்டை பண்ணியொரு காலம் என்னைப்பூசை பண்ணினாயானால் இந்த அபசாரந்தீரும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அப்போது நாம் அதிக கிருபையுடனே காளகண்டந்திரிநேத்திரம், மான்மழு, சதுர்ப்புயத்துடனே பார்வதி சமேதராக உனக்குத் தெரிசனங் கட்டளையிடுகிறோமென்று உத்திரவு பண்ணினா ரென்றவாறு.

3. ஈதுரை பகரச் செவ்வே
எிச்சைகொண் டெழுந்து வந்த
கோதறு பரங்குன் றத்தைக்
கோளொரு வலமாய் வந்து
காதையின் மகிமை யாமோ
கழறுவங் கழற லொண்ணா
தீதறு விருடீர் வேட்கைச்
சித்தரே செப்பக்கேண்மின்!

எ.து பரமசிவன் இந்த உத்திரவு செய்யவும், உடனே அதிக ஆசை கொண்டு திருக்கயிலாயம் விட்டு வந்து யாதொரு குற்றங்களுமில்லாத திருப்பரங்குன்றத்தைச் சுப்பிரமணிய சுவாமியானவர் அன்புடனே பிரதெட்சணம் வந்த பிரதெட்சண மகிமையான சரித்திரத்தை நம்மாலே சொல்லக்கூடுமோ சொல்ல முடியாது.

ஆனால் நீங்கள் விருதாவான குற்றமுள்ள கதையைக் கேளாமல் புண்ணியமான இந்த சிவபரங்கிரியை வலம்வருகிற சரித்திரத்தை ஆசையுடனே கேட்க வேணுமென்கிற சித்தத்தைப் பெற்ற பேறானதால் எமக்குத் தெரிந்த மட்டுஞ் சொல்லுகிறோம். கேளுங்கோள் நைமிசாரணிய ரிஷிகளே என்று சூதமகாரிஷியானவர் சொல்லுவார் என்றவாறு

4. பூதமுங் கடந்து முன்று
புவனமுங் கடந்து வண்ட
பேதமுங் கடந்து மூல
பெலங்களுங் கடந்து விந்து
நாதமுந் துவாத சாந்த
நன்னகர் கடந்து சேட
பேதமுங் கடந்து சான்றாய்ப்
பொருந்திய பரமிக் குன்றம்.

எ.து பஞ்சபூதமாகிய பிரிதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாசங்களுடன் கடந்து பிரமலோகம், விஷ்ணு லோகம், ருத்திரலோகமான திரிபுவனமுங் கடந்து, பல்லாயிரங்கோடி அண்ட அடுக்குகளும் கடந்து, இந்த அண்டங்கள் வேறுண்டான இடமுங்கடந்து, இதுக்கு அதீதப்பட்ட விந்துங் கடந்து, நாதமுங் கடந்து, அதற்கு மேல் துவாத சாந்த சிவபுரமாகிய வெளியும் கடந்து, மிகுதியான ஞானாதீதமுங் கடந்து இருக்கும் சருவ சாட்சியாகிய சுவாமிநாதன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எழுந்தருளியிருக்கா நின்றது. இந்த சிவபரங்கிரி என்று சொல்லுமிந்தக்கிரியை ஏக சொரூபமாய் அபூதப்பட்டதால், அந்த அபூத பராசலமென்று பேருண்டாச்சுது என்றவாறு.

5 இவ்வகைப் பூத கணத்தை
இயம்பவ னருளால் சிந்தை
கவ்விய முனிவீர் கேட்பீர்
காருறு வண்ணன் வேதா
நவ்விய வுருத்திரன் முன்று
நாளையுங் காட்டு மிந்த
திவ்விய பராச லத்தைத்
தினம்வலம் வருவ தாமால்

எ.து. இப்படி அதிக மகிமை பொருந்தினதால் இந்த மலைக்கு சிவபரங்கிரி என்று சொல்லாநின்ற கிரிப்பிரதெட்சண மகிமையைச் சொல்லுவதற்கு குமாரசுவாமி அருளினாலே சொல்லப்பட்டது. நீங்களும் குமாரசுவாமி கிருபையை உள்ளத்திலே உறுதியாக வைத்துக்கொண்டு கேட்கிற முனிவர்களே நமக்குத் தெரிந்த மட்டுஞ் சொல்லுகிறோம். கேளுங்கோள்.

அந்த சிறகந்த மலையானது நீல மேகச் சாமள சொரூபமான மகாவிஷ்ணுவாகவும், பிரம்மதேவனாகவும், மான்மழுவுடைய ருத்திரராகவும் இருந்து, சிருட்டி, திதி, சங்காரமிந்த மூன்று காலத்தையுமிந்த பரங்கிரி செய்து கொண்டிருக்குமானதாலந்த அழகுடைய பராசலத்தை தினகாலம் வலம் வந்தால் சகல இஷ்டமும் உண்டாமென்று நைமிசாரணிய ரிஷிகளுக்குச் சூத மகாரிஷி சொல்லுவாரென்றவாறு

6. தாரக பிரம ரூபச்
சண்முகக் கடவுளாரும்
ஓரடி நடக்கு மாறு
முந்தியிற் பூத்தோன் றூய
வாரணக் கடவு டேவர்
மறைமுனி சித்தர் யோகர்
நாரதர் குழாங்கள் சத்திய
நாகத்தை வலஞ்செய் தெய்த்தார்

எ.து. தாரக பிரம்மமே சொரூபமாகப் பெற்ற ஆறுமுகக் கடவுளாரும், கிரிவலம் வரவேணுமென்று ஒரு அடி நடக்கவும், கூட உட்னே மகாவிஷ்ணு பிரம்மதேவன், வெள்ளை யானையுடைய தேவேந்திரன், முப்பத்துமுக்கோடி தேவர்கள் வேதங்களைச் சொல்லாநின்ற நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் பதினெண்கோடி சித்தர்களும் அளவில்லாத யோகீசுராகளும், நாதரர், தும்புரு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

கின்னார் கிம்புருடர் கருடர் காந்திருவர் சித்த வித்தியாதரர் எல்லோரும் சத்தியகிரியை வலம் வந்து கூடவே குமாரசுவாமியுடனே எழுந்தருளி இருக்கிறார்களென்று சூதமகாரிஷி சொல்லுவாரென்றவாறு.

வேறு

7. இருபத் தொன்பது திருவிளையாட லின்னமணர்
சுரபிவீடனந்தகுண பாண்டியன் றுதிகாலத்
திரவிதன் மரபுதித்திடு மிராமனா மிறையோன்
பரகிரித் திருவலம் வரப் பெற்றனன் பரிவால்

எ.து பின்னும் மலைவலம் வந்த பேர்கள் இன்னாரின்னாரென்று தெரியும் படிச் சொல்லுகிறோம். கேளுங்கள் ரிஷிகளே

மதுரையில் சுந்தரேசுரர் இருபத்தொன்பதாவது திருவிளையாடலானது, சமணாள் பாண்டியன் பேரிலே பகையாக ஓமகுண்டத்திலுண்டு பண்ணின மாயப்பசுவை சம்மாரம் பண்ணின அனந்த குண பாண்டியன் அரசுரிமை செய்யுற காலத்திலே, சூரிய வமிசத்திலே உற்பத்தியான ஸ்ரீ ராமசுவாமியானவர் இலங்கைக்கு, இராவண சம்மாரத்துக்குப் போனபோது, இந்தப்பரங்கிரியைப் பிரதெட்சணம் வந்தார். தனக்கே ஒரு அன்புண்டாகி சீதா லெட்சுமியைத்தான் பெற்றுக் கொள்ளவேணு மென்கிற ஆசையினாலே என்ற வாறு.

8. கண்டபோ தளங்கனிந்து கண்பனிப்பக் கமலம்
பூண்டசெஞ் சரண்வருந்திடப் புளகமெய் பூப்பத்
தூண்டவேட்கை யஞ்சலிகொடு துரோபதை யுடனே
பாண்டவாள் பரங்கிரி வலம்வந்தனர் பலனால்

எ.து. பின்னுமென்னவென்றால் பரங்குன்றத்தைக் கண்ணினாலே கண்டவுடனே உள்ளமானது கனிந்து, உருகி, இரண்டு கண்ணினாலும் ஆனந்த பாஷ்பிதம் பொழியவுஞ் செந்தாமரைப் பூப்போலும் சிவந்த இரண்டு பாதமும் வருத்தப்படவும், சரீரம் புளகாங்கிதமாகவும், ஆசையானது தூண்டவுங் கையினாலே கும்பிட்டுக் கொண்டு துரோபதையுடனே பஞ்சபாண்டவாள் பரங்கிரியை வலமாக வந்தார்கள். தாங்கள் அரசுரிமை பெற வேணுமென்பதாக என்றவாறு

வேறு

9. ஆனந்த மகிழ்ச்சி தூங்க
ஆலவா யகன்று ஞான
மோனந்தம் பொழிந்த வுள்ள
முருகவுமெய் சிலிர்ப்பச் செவ்வாய்த்
தேனுந்துந் தமிழ்ப்பா மாலைத்
தேக்கவா றெழுத்துட் கொண்ட
தானந்த கீரன் சத்திய
சயிலத்தை வலஞ்செய் தானால்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எ.து. சரவணப் பொய்கையும் பஞ்சாட்சரப் பாறையும், திருவரசும், பிரதெட்சணமும், பரங்குன்றத்து மகிமையும், புராணசித்தம் அதிக மகிமை சொன்ன ஆனந்த சந்தோஷமானது தன்னை இழுக்க, மதுராபுரியை விட்டு வருகிறபோது சிவஞானம் பொங்கிப் பிரவாகமெடுக்கும் மோனமானது. திமிர்ந்து கொண்டிருக்கிற உள்ளமானது உருகவும், சரீரமெல்லாம் மயிர்க்கூச்சிடவும், அழகுடைய வாயினாலே பஞ்சலட்சணம், புராணம், ஆகமம், சாஸ்த்திர முதலான அந்த சாரமாகிய மதுரமொழி பொங்காநின்ற தமிழாகிய திருமுருகாற்றுப் படையைத் தோத்திரம் பண்ணவும், பின்னுஞ் சடாட்சரத் தியானம் பண்ணிக்கொண்டு சங்க வித்துவான்களுக்கு முதன்மையான நக்கீரன் சத்தியகிரியை வலமாக வந்தான், குமாரசுவாமியை தெரிசனம் பெற வேண்டியதற்காக என்றவாறு

10. முத்தமிழ் பொழியும் பொய்யா
பொழிதிருப் பரங்குன் றத்தை
சுத்தியே வலமா யேகச்
சூரனைத் தடிந்த வேலான்
பத்திர காளிப் பூவைப்
பாடெனப் பழிச்சுப் பாடும்
வெத்திபா டுடைய புண்ணியத்
தலம்வலம் விதிக்கற் பாலார்.

எ.து. முத்தமிழான இயலிசை நாடகமென்று சொல்லாநின்ற தமிழைப் பிரசங்கம் பண்ணா நின்ற பொய்யா மொழியான வித்துவான், திருப்பரங்குன்றத்தைச் சுற்றி வலமாக வருகின்ற சூரனைச் சம்மாரம் பண்ணாநின்ற வேலாயுதக்கடவுள் வழியிலே வந்து மறித்துக் கொண்டு, பத்திரகாளிக்குரித்தான பாலை நிலத்துச் சுரம்போக்கு வெண்பா பாடவும், நீ பாடினது நல்லதில்லை என்று குமாரசுவாமி பாடி வெற்றி பெற்ற அந்தப் புண்ணியத் தலத்துப் பிரதெட்சண மகிமையை ஆராலே சொல்ல முடியுமென்று சொன்னார் சூதமகாரிஷி என்றவாறு.

11. கலைமக ளுருவங் கொண்ட
கன்னியாங் கனியை நவ்வற்
கொலைசுட வூதித்தின்ற
கொம்பனா ரவ்வைக் காகச்
சிலைநுதற் குமரி யாளைத்
தெக்கண பாகன் வந்த
மலையடி வாரங் கந்த
மலைவலம் வகுக்கற் பாலார்!

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எ.து. சரசுவதியே அவதாரம் பண்ணிப் பிறந்த அழகுடைய வஞ்சிக்கொம்பு போலுங் கன்னிப்பருவம் பெற்றவள், பார்க்கிற பேருக்கு விருத்த ரூபமாக இருக்கும் ஔவையானவள் மலைவலம் வருகிறபோது. வில்லைப் போலும் புருவமுடைய குமரியான தெய்வயானைக்கு வலது பாகத்திலே எழுந்தருளியிருக்குங் குமாரசுவாமியானவர் வந்து ஒரு நவ்வல் மரத்தின் மேலே, மாடுமேய்க்கிற குழந்தை வடிவாய் ஏறிக்கொண்டிருக்க, ஔவையார் கண்டு, கொலை கொலையாய்ப் பழுத்துக் தொங்கும் நாவல் பழத்தில் ஒரு பழம் போடென்று கேட்க, உயர இருந்து குழந்தைக்கு ஔவை மைத்துனியானதால் பரியாசமாய் "கிழவி! உனக்கு சுட்ட பழம் வேணுமோ சுடாத பழம் வேணுமோ?" என்று கேட்க பழத்திலே சுட்ட பழம் உண்டாவென்று ஓசனை பண்ணி சுடாத பழம் வேணுமென்று கேட்க கனிந்த பழத்தைப்பறித்து மணலிலே போடவும் அந்தப் பழத்தை எடுத்துப் பொசிக்க மணலை வாயினாலே ஊதிறபோது "கிழவியே! வாயிலே சுடப்போகுது" என்ற குழந்தையைப் பார்த்து ஔவை பாட அந்த ஔவைப் பாடலைப் பெற்ற கந்தகிரி அடி வாரத்திலே வலம்வருகிற மகிமை, ஆராலே சொல்ல முடியுமென்றார் சூதமகாரிஷி என்றவாறு.

12. மொய்ம்புடைக் குவவுத் தோளான்
முசுகுந்தன் சிவியாம் வேந்த
னைம்படை மாயற் கொக்கு
மரிச்சந்திரன் றேவ தேரோன்
மைம்புயற் கொடியோர் மற்ற
பார்த்திபர் பரங்குன் றத்தை
கொம்பொடு வலமாய் வந்து
குறையெலாந் தவிர்ந்து வாழ்ந்தார்!

எ.து. அதிக பலம் பொருந்திய மலைபோலும் புயத்தையுடைய முசுகுந்தச் சக்கரவர்த்தியும் சிபிச் சக்கரவர்த்தியும் பஞ்சாயுதமுடைய மகாவிஷ்ணுவுக்குச் சமானமாகிய அரிச்சந்திர மகாராசாவுங் கோவிதாரத்துசனும், வருஷா காலத்து மலைபோலக் கொடுக்காநின்ற மற்ற ராசாக்களும் திருப்பரங்குன்றத்தைத் தங்களுடைய பத்தினியுடனே பிரதெட்சணம் வந்து குறைகளெல்லாம் நிவிர்த்தி பண்ணிக் கொண்டு சுகமாக வாழ்ந்தார்கள் என்றவாறு

வேறு

13. புரிசைகோ புரஞ்சிகர மாலையம் புதுக்கிற்
றருமம்யாவையு முடிவுறத் தனமுறவில் லாதவர்
கிரித்திரு வலம்வரின் வரும்வலப் பலனிச்
சரிதை யாளர்க்குச் சாந்திராயணப் பலன்றருமால்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எ.து சிவாலயத்தில் விமானம், கோபுரம், திருமதில், மண்டபம் முதலானது நூதனமாகச் செய்யவுஞ் சீரண உத்தாரணம் பண்ணவும், முப்பத்திரண்டு தரும முதலான மற்ற தருமங்களும் பண்ணத் தக்கதாகவும் திரவியமில்லாத பேர்களுந் திரவியம் வேணுமென்கிறபேர்களுமிந்த அழகுடைய பரங்கிரியை வலம்வந்தால் நினைத்தபடி கிடைக்கும்.

பின்னுமிந்தச் சரிதைத் தொழிலான தருமம் செய்கிறபேருக்கு வலம் வருகிற பலன், சாந்திராயண விரதமிருந்தபலன் எவ்வளவு வருமோ, அந்தப்பலனுக்கு சரியாகும் வலம் வருகிறபலன் என்றவாறு.

வேறு

14. ஆகமப்படி விதிவழு வாது வாசாரப்
பாகமுற்றுப் பாராயணந் தெரிசனப் பதியை
யேகசித்த பூசனைபுரி கிரிகைய ரினிய
தாகவும் பரங்கிரி வலம்வரி லதிற்சரியாம்

எ.து ஆகம புராணத்திற் சொல்லுகிற கிரியை தப்பாமல் ஆசாரத்துடனே பக்குவராக இருந்து ஏக சித்தமாய் சிவபூசை, சிவதெரிசனம், சிவபுராணம் பாராயணஞ்செய்து வருகிற கிரியையாளர் அன்புடனே பரங்கிரியை வலம் வந்தால் அதற்குச் சரியான பலன் இது கொடுக்கும் என்றவாறு.

15. பூரகத்தொடு ரேசக கும்பகப் புழக்கத்
தாரகத்தொடு பிராண சைதன்னிய மாயோகர்
சீரகத்திரு வுருபரங் கிரியினைத் திறமா
ஓரகத் துடன்வலம் வரின்பல னுதவும்.

எ.து. பூரகத்துடனே, ரேசகத்துடனே, கும்பகத்துடனே, அந்தந்த மாத்திரைக் கணக்குப் பிரகாரம் பழகின சீவான்மாவை, மனதுடனே லயப்படுத்தின மகாயோகம் பெற்றபேர்களுஞ் சிறப்புடைய மனதுடைய மகாலட்சுமி வாசம் பண்ணாநின்ற பரங்கிரியை உறுதியாக ஒருமனதுடனே வலம்வந்தால் அந்த யோகாப்பியாச பலன் பெற்றுக் கொள்வார் என்றவாறு.

16. சீவனைப் பதியிடத்தில் ஐக்கியஞ் செய்த
பாவனைப் படியாகவே யிருந்தனு பவிக்கும்
மாவகத்து மெய்ஞ்ஞானிகள் வளர்பரங் கிரியை
யாவலத்தடி யடியின்மேல் வலமதாய்க் கலவார்.

எ.து. சீவனைப் பரத்தினிடத்திலே ஐக்கியம் செய்த பாவனை எப்படியோ அப்படியாகவே பரமர்தம் பக்கமாகவேயிருந்து அனுபோகம் பெறாநின்ற மகா உள்ளத்தைப் பெற்ற மெய்ஞ்ஞானிகள் வளராநின்ற பரங்கிரியை அவாவற்று அடியின் மேல் அடி வைத்து வலம்புரிவார்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

என்றவாறு.

17. ஐந்துவாச் சிரமத் தவரெவ ரவதூதர்
பந்தமுலத்தை யகழ்ந்திடு மிகப்பகை துறவோர்
வந்தயாகிய பரங்கிரி மான்மிய மறிந்து
சிந்தையோர்ந்தவர் தினந்தினம் வலமதாய்த் திரிவார்.

எ.து. பிரமசாரி, கிரகஸ்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசி, வரணாச்சிரமி என்கிற ஐந்து ஆச்சிரமமும் அற்றவரெவரோ அவர்தான் அவதூதாச்சிரமம் பெற்றவர். அவாளும் பாசபந்தமான ஆசை வேரையும், வருணபேதமும் நாசம் பண்ணாநின்றதும் உலகத்தையும் பகைத்த துறவோர்களுங் கடந்த பதத்தைக் கொடுக்காநின்ற பரங்கி மகத்துவத்தை வேதாந்த விசாரணையினாலே அறிந்து, சித்தம் ஒருமைப்பட்ட மகத்துக்கள் தினந்தோறும் பிரதெட்சணம் வருவார்கள். விருதாவிலே உலகத்திலே திரியாமல் என்றவாறு

18. முச்சுடர்களு முறைமுறை தாரகை முதலோர்
வச்சிரக் கடவுளர் முதலோ ரட்டவசுக்கள்
நச்சுறத் தட்டநா கங்களட்ட நாகங்கள்
நிச்சயத்துறப் பரங்குன்றஞ் சுத்துவார் நிதமே.

எ.து. அக்கினி, ஆதித்தன், சந்திரனும், அடுக்கடுக்காக இருந்து முன்னும் பின்னுமாய் வருகிற நட்சத்திரம் முதலான கிரகங்களும், இந்திரன் முதல் அட்டதிக்குப் பாலகர்களும், அட்டவசுக்களும், விஷம் பொருந்தின எட்டு நாகங்களும், எட்டு யானைகளும், தங்கள் தங்கள் சரீரமும் ஆயுசும் நித்தியத்துவ முண்டாகும் படி திருப்பரங்குன்றத்தை நிதகாலம் வலமாகச் சுற்றி வருவார்கள் என்றவாறு.

19. ஐந்துபொறி வுற்றிடுங் காமதேனுவந்
திந்துசேகரன் முடிமடுப் பால்பொழிந் திழிந்து
கந்தமாகிரி வலம்வரு மேல்மேல்க் களித்து
வந்ததர மறிவாறறிவுடைய மாதவரே.

எ.து. தெய்வ லோகத்திலேயிருந்து வந்த ஐந்து அறிவோடுங் கூடிய காமதேனானது வந்து, மூன்றாம் பிறைச் சந்திரனைச் சடையிலே தரித்த, சிவசொரூபம் பெற்ற பரங்குன்றத்துச் சிரசிலே, மடியிலே நிறைந்திருந்த பாலை முலைவழியாக அபிஷேகம் பண்ணி, சிவகிருபை பெற்றுக் கீழேயிழிந்து சிறகந்த மலையை மெல்ல மெல்ல அதிக சந்தோஷடத்துடனே வலமாக வந்து தாம் பகுத்தறிவொடுங் கூடிய ஆறறிவுடைய மகாதவம் பெற்ற ரிஷிகளே என்று சூதமகாரிஷி சொல்லுவார் என்றவாறு

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

20. ஐவகைப்பெரு வேள்வியோர் அட்ட சித்திகளோர்
கைவகைத் தொழிலட்ட கன்மத்தளோர் கனகஞ்செய்
செய்வகைத் தொழில் கற்றுளோர் சித்தி யாகுதற்குத்
தெய்வசிந்தையாய்த் திருப்பரங் கிரிவலஞ் செய்வார்.

எ.து. தெய்வயாகம், பிரமயாகம், அசுரயாகம், ராஜசூய யாகம், நரயாகமென்னும் ஐந்து வேள்வி செய்யிற பேர்களும், அணிமா, லகிமா, மகிமா, கரிமா, பிராத்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் அட்டமாசித்தி வேண்டின பேர்களுங், கைத்தொழிலான் இந்திர சால வித்தை செய்யிற பேர்களும், வசியம், மோனம், தம்பனம், மாரணம், உச்சாடணம், ஆகிறஷணம், வித்துவேஷணம், பேதனம் என்னும் எட்டு கருமத் தொழில் செய்யுற பேர்களும், வாதஞ் செய்யக் கற்றுக் கொள்ளுகிற பேர்களும், அவாளவாள் அந்ததந்தக் காரியந் தங்களுக்கு சித்தியாகுறதுக்குச் சடாட்சர மூர்த்தியான தெய்வத்தை எத்தேச காலமும் ஒரு சிந்தனையாகத் திருப்பரங்கிரியை வலமாக வருவார்கள் என்றவாறு.

வேறு

21. மாமரையோ ரெல்லோரும் வைகறை காலத்தெழுந்து
நேமமுதல் முடித்து நியாசத்துடனெழுந்து
காமன் பணிந்துருகும் கந்தகிரியை வலமாய்க்
கோமகனைப்போல் வருவார் கோடான கோடியே.

எ.து. நாலு வேதமும் சரற்கால வருஷம்போல வாயினாலே வேதங்களைப் பொழியாநின்ற வேதப் பிராமணாளும், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் இந்த நான்கு வருணத்தாரெல்லோரும், வைகறை காலத்திலே நித்திரைபங்கம் பண்ணியெழுந்து தியான தோத்திரங்களைப் பண்ணிப் பின்பு துஷ்ட்டிகளைத் தீர்த்துக் கொண்டு வந்து சரவணப் பொய்கையிற்றானம் பண்ணி, இயமம், நியமம், நியமாசன வரைக்கும் முடித்துக் கொண்டு அங்கநியாசங் கரநியாசத்துடனெழுந்து பிராணாயமம் பண்ணிக்கொண்டு மன்மதன் பணிந்து, உருகாநின்ற கந்தகிரியை வலமாக இராசகுமாரனைப்போலே நிற்சிந்தையாய் வருவார்கள் கோடான கோடி பேர்கள் என்றவாறு

22. கன்றினைத் தேடித் கதறுவபோ லேகதறிச்
சென்று மறையைத் திருநாத் தழும்பேற
நன்றுபுரி நன்னகராம் நல்வாழ்வருள் செய்பரங்
குன்றைவலம் வருவார் கோடான கோடியே.

எ.து. வாலவயதான பசு தலையீத்தீன்ற இளங்கன்றானது தாயைக் காணாமல் தேடிக் கதறுவது போலவும், அழகுடைய நாவானது தழும்பேறவும்,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வேதப்பிராமணாள் வேதகோஷம் பண்ணிக்கொண்டு வருவார்கள்.

நல்ல காரியங்களைக் கொடுக்கும் சிவபுரமாகிய இந்தச் க்ஷேத்திரம் மோட்ச சாம்பிராச்சியத்தையும் கொடுக்கா நின்ற திருப்பரங்குன்றத்தைப் பிரதெட்சணம் வருவார்கள் கோடான கோடி பேர்கள் என்றவாறு.

23. பூசுரர்க ளங்கமெலாம் பூதிதனை மட்டித்துத்
தேசுருத் திரர்க்கஞ் சிறப்புறனெண் ணாலணிந்து
பேசுமறை யைப்பேசிப் பேணுபரங் கிரியைங்
கோசம் வலம் வருவார் கோடான கோடியே

எ.து. நித்தியாக்கினி தவறாமல் செய்யாநின்ற பூசுரர்கள் தேகமெல்லாம் விபூதியை அந்தந்த ஸ்தானங்கள் தோறும் அளவுப் பிரமாணமாக லேபனஞ்செய்து சிவருபமாகிய ருத்திராட்சங்களை அழகாகச் சென்னி முதல் தரிக்க வேண்டிய இடங்களெல்லாம் தரிக்கின்ற விதியாய் எண்ணிக்கைப் பிரகாரம் தரித்துக் கொண்டு சொல்லாநின்ற வேதாத்தியராயனம் பண்ணிக்கொண்டு யாவரும் தோத்திரம் பண்ணி வணங்காநின்ற பஞ்சகோசத் தலமான பரங்கிரியை வலம் வருவார்கள் கோடான கோடிபேர்கள் என்றவாறு

24. ஓர்கா றனையெடுத்த வூருவத்தி லேமடித்த
கார்கால வருடம் போல் கண்கலுழி பொங்கிவரச்
சீர்சாலுறு பரங்குன்றத் தேவைநினைந் தேமறையோர்
கூர்வாய் வலம் வருவார் கோடான கோடியே

எ. து. ஒரு வலது காலை எடுத்து இடது துடையிலே மடித்துக் கொண்டு, மழைக்காலத்து மழைபோலக் கண்களிலே தாரை தாரையாக ஆனந்த நீரானது பிரவாகமெடுக்கவும், லெட்சுமியானவள் எக்காலமும் வாசம் பண்ணாநின்ற பரங்குன்றத்திலே எழுந்தருளியிருக்கும் சுப்பிரமணிய சுவாமியைத் தியானம் பண்ணிக் கொண்டு, அதிக விவேகத்துடனே தபசு பண்ணா நின்ற பிராமணாள் பிரதெட்சணம் வருவார்கள் கோடான கோடி பேர்கள் என்றவாறு.

25. மவுனமதாய் குன்றத்தை வாதனையெல்லா மடக்கிக்
கெவனமதாய்த் தானுமற்றுக் கேசரிமார்க் கத்தாலே
சிவசண் முகஞான தேவன்பரங் கிரியை
நவமுறவே வேதாந்தஞானி வலமாய் வருவார்.

எ.து காஷ்ட்ட மவுனமாகச் சாக்கிரஞ் சொற்பனஞ், சுழுத்தியென்று மூன்றவத்தையும் பஞ்ச இந்திரிய விடைய வாதனையெல்லாம் மனதிலே அடக்கி, மனதை சீவான்மா பட்சம் பண்ணி, சீவன் தானென்கிற அகமற்றுப்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பரவசத்திலே பிராணலயம் பண்ணி, சிவசன்முக ஞானதேசிகனான சற்குரு தெரிசனம் பண்ணி எக்காலமும் வாலவயதாயிருக்கிற வேதாந்த ஞானிகளும் பரங்கிரியை நித காலம் வலமாக வருவார்கள் என்றவாறு.

26. போதாந்த முற்ற சிவயோக மனுபவிக்கும்
நாதாந்த மோன நலத்தா லடியளந்து
மீதான மற்ற வெளியாம் பரங்கிரியை
நாதாக்க ளெஞ்ஞான்றும் நண்ணிவல மாய்வருவார்

எ.து. ஞானத்துக்கு முடிவாகிய யேக பாவகம் பண்ணின மகாவாக்கிய பரமநிட்டாள் சிவபோகமான அனுபோகம் அனுபவிக்கிறபோது நாதத்துக்கந்தமான மோனமாகிய நிரதிசயானந்தத்தினாலே, பூமி அதிராமல் அடிமேல் அடி வைத்துக் கொண்டு மீதானந்தத்து முடிவான வெட்டவெளியான பரமாகிய கிரியை, நாதாக்க்ள் எக்காலமும் அந்தத் தலத்திலே வசித்துக்கொண்டு தினம் தினம் வலம் வருவார்கள் என்றவாறு

27. சித்தாந்த மார்க்கந் தெளிந்தோர் தேவாரம்
பத்தா ளுடனே பரிந்து திருவாசகங்கள்
எத்தேச. கால மிருபோதுங் கந்தகிரி
யத்தா வென்றே பாடியாடி வலமாய் வருவார்

எ.து. சிவஞானபோதம் முதலான மற்ற சாத்திர விசாரணை பண்ணி சிவபோகம் வரைக்கும் நிருவாண தீட்சை பெற்று, சிவத்தை நிச்சயமாய்க் கண்டு தெளிந்த சித்தாந்திகள், தேவார திருவாசகம் சிவபக்தாளுடனே அன்புடனே கூடிக் கொண்டு எத்தேச காலம் ஓதிக் கொண்டு, உதயகாலம், அஸ்தமனகாலம் இருபோதும் ஸ்ரீ கந்தமலையை அய்யா அய்யா என்று தோத்திரம் பண்ணி ஆனந்த சந்தோஷமாய் நடனம் பண்ணிக்கொண்டு வலமாக வருவார்கள் என்றவாறு.

28. திருப்புகழு மாறு திருமுருகாற் றுப்படையும்
விருப்புறு வேற்கந்தன் வினவும் பனுவலெல்லாம்
செருக்குடனே யோதித் திருப்பரங்குன் றத்தைநிதங்
குருப்புக ழாலும் வலமாய்க்கோடி யடியார்கள் வருவார்கள்.

எ.து. திருப்புகழுந் திருமுருகாற்றுப்படை ஆறும், வேலாயுதத்தைத் தரித்த கந்தசுவாமி ஆசையுடனே கேள்க்காநின்ற பிரபந்தங்களையெல்லாம் அதிக ஆனந்த சந்தோஷத்துடனே தோத்திரம் பண்ணிக் கொண்டு குருவுபதேசத்தையும் செபம் பண்ணிக் கொண்டு, தினகாலங் கோடி சிவனடியார்கள் வலம் வருவார்கள் என்றவாறு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

29. ஈனர்களுங் குண்டர்களு மிழிகுலத்தோர் கோளகரு
மூனபஞ்ச பாதகரு மொழுக்கமிலா மூடர்களு
ஞானமுற நாற்கவியு நாவி நடனமிட
மானமுறக் கந்தமலையை வலமாய் வருவார்.

எ.து. ஈனமாகப் பிறந்த பேர்களும், கோளகராகப் பிறந்த பேர்களும் அதிக பாவமுடைய பஞ்ச பாதகரும், நல்லவாளிடத்திலே வணக்கமில்லாத மூடர்களும், இவர்களுக்கு நல்ல அறிவும் ஞானமும் உண்டாகும்படியாகவும், மோட்சமுண்டாகும்படியாகவும், பின்னும் குமார சுவாமியைப் பாடும்படியாக, நாலு புலமையும் வேண்டின பேருக்குச் சரசுபதி நாவிலே நடனம் பண்ணுவாள். பின்னுஞ் சபையிலே அவமானமுறாமல் மானமுண்டாகவும், தினந்தோறும் கந்தகிரியை வலம் வருவார்கள் என்றவாறு.

30. புத்திரர்க்கு வேட்கையுற்றோர் போகநிதி வேட்கையுற்றோர்
சத்திர பதியைப்போற் றரணிபெற வேட்கையுற்றோர்
பத்திதரு ஞானப் பரபோக வேட்கையுற்றோர்
நித்தம் பரங்கிரியை நேயவல மாய்வருவார்.

எ.து. புத்திரபாக்கியத்துக்கு ஆசையுண்டான பேரும் இகத்திலே யோகத்துக்கு ஆசையுண்டான பேரும், திரவியத்துக்கு ஆசையுண்டான பேரும், சக்கிரவர்த்தியைப் போல உலகமெல்லாம் ஒரு குடைக்கீழ் செங்கோல் செலுத்தி இராச்சிய பரிபாலனம் பண்ணவேணுமென்கிற ஆசையுண்டான பேரும், பத்தியினாலே வரப்பட்ட ஞானத்தைப் பெற்ற பேர்கள் பரத்தினுடைய போகம் வேணுமென்று ஆசை உண்டான பேரும் நித்தியம் பரங்கிரியை அன்புடனே வலமாக வருவார்கள் என்றவாறு.

வேறு

31. ஆன்றகேள்வி யான கவுரியன் பாரியா
ளாறு நாளுறு திங்கள்
பூன்றநாள் பரங்கிரி வலம்வரு தல்போல்
புவியு ளோர்வர லாம்பின்
நான்றவாய் பிடிய னம்பதி விறுதை
கண்டப் பதுபோ லாகுஞ்
சான்ற ஞானிகண் டப்பதும பொற்பதஞ்
சயிலத் தைவலஞ் செய்தல்

எ.து. இந்த கிரியை வலம் வருகிற சட்டதிட்டமென்னவென்றால் சாந்த குணத்தினாலே சகல கல்விகளையுங் கற்று அதினுடைய அந்த சாரங்களை கேள்விப்பட்டு அந்த மனுநீதி தவறாமல் அரசுரிமை செய்யும் பாண்டியன் பாரியாளானவள், பத்துமாதம் பூரண கெற்பமாய்ப் பிரசவிக்கிற காலமான நாளிலே,

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அந்த ராஜஸ்ரீயானவள் பாதம் வருந்தாமல், பூமி அதிராமல் மெல்ல மெல்ல பரங்கிரியை வலம் வருகிறது போல, உலகத்தாரெல்லோரும் அப்படி வலம்வர வேணும்.

பின்னும் எப்படி வரவேணுமென்றால், தொங்கின வாயையுடைய பெண் யானை போலவும், தேவலோகத்து அன்னம் போலவும், கற்புடைய ஸ்ரீகள் நடப்பது போலவும், உபநிடத வாக்கியங் கேள்விப்பட்டு, அந்த அனுபோகம் பெற்ற ஞானிகள் நடப்பது போலவும் பரங்குன்றத்தை வலம் வரவேனுமென்றவாறு.

32. **முனமும்வாக் கொருப்பட விழிப்பெரு வீரன்மல்கவாய்பேசாமல்**
தினமும் வஞ் சகநினைவும் பொய் பாதகச் செய்கையு மறநீக்கித்
தினமுமோர் பொழுதாயினுங் குமரனைச் சித்தசுத்தியதாய்
நினைவு கொண்டு சண்முகனுறு பரங்கிரிநிதம் வலம்வரலாமால்.

எ.து மனதும், வாக்கும் ஒன்றுபட்டுக் கண்பார்வையானது பாதத்தினுடைய பெருவிரலைப் பார்த்துக் கொண்டு, வாய் பேசாமல் கோபமில்லாமல், வஞ்சக நினைவில்லாமல், பொய் இல்லாமல், பாவமான நடத்தைகளில்லாமல், பாவிகளுடனே சேராமல், இந்தக் குற்றங்களை நிவர்த்தி பண்ணி நிதகாலம் ஓர் பொழுதாகிலும் குமார சுவாமியை அந்தக்கரண சுத்தியாய் நினைத்துக் கொண்டு, சண்முகநாதர் எழுந்தருளியிருக்கும் பரங்கிரியை வலம் வர வேணும் என்றவாறு.

33. **கட்குடித்திடல் மாமிசம் பொசித்திடல்**
களவுசெய்திடல் காமத்
தட்படுத்துதல் மாமகத் தீக்களைத்
தூடணித் திடல்வேதம்
பெட்புரைத்திடல் பின்னின்று பழிக்குதல்
பிறர்மனை தனைநத்தல்
விட்பொடித்திடும் பரங்கிரி வலம்வரும்
விவேகிகட் கிவையாகா

எ.து. மூன்று கள்ளுங் குடித்தல், சாராயங் குடித்தல், மாமிசம் பொசித்தல், களவு செய்தல், காமவிகாரத்துக்கு உட்படுதல், வேதாந்த சாஸ்திரம் வாசிக்கிறபோது பின்னே நின்று பழிக்குதல், பிறர்மனையாளை ஆசைப்படுகுதல் இவையெல்லாம் புத்திமான்களான பேருக்குத் துன்மார்க்க நடத்தைகளாகாது.

ஆகாசம் பிளக்க வளரும் பரங்குன்றத்தை வலம் வரும் போது என்றவாறு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

34. மாதர் தோளொடும் மற்றவர் தோளொடும்
மதிக்குடை கழலொடும்
சூதகா சுசத்தொடும் புலையர்கணிழற் றொடுதலும்
சுசியில் லாத
பாதகாளொடும் பகுத்தறி விலரொடும்
பரங்கிரி வலஞ்செய்யா
நீதமாம் பரங்கிரி வலம் வருதல் நேய
முற்றிடலாமால்.

எ.து. ஸ்ரீகள் தோளிலே தன்கையை வைத்து வருதல், சிநேகிதாள், மற்றபேர்கள் தோள்மேலுங் கைபோட்டு வருதல், குடைபிடித்து வருதல், காலிலே பாதரட்சை போட்டுக் கொண்டு வருதல், மரண சூதகமும், பிறவி சூதகத்தொடும் வருதல், தூரஸ்திரீயும், நீசாள் நிழலும் படுதல், நீசாளைத் தொடுதல், ஆசாரமில்லாத பேருடனே சேருதல், பாவிகளுடனே கூடுதல், பகுத்தறிவில்லாத பேருடனே கூடுதல் இந்தக் குற்றங்களுடனே வலம் வரலாகாது. தருமம் பொருந்தின பரங்குன்றத்தை அன்புடனே வலம் வரவேணும் என்றவாறு.

35. சிவிகை வாகனந் தம்பலந் தீதுசொற்
செப்பிடல் மனையாளைத்
தவிர வந்திடல் மனதுலோபித்திடல்சத்
தியமறல் நோயர்
செவிடர் அந்தகர் முடவர்கள் சுத்தர்பாற்
சேருதல் மலநீக்கல்
புவிபுகழ் பரங்கிரி வலம்வருதல்போரு
தானிவை யாகா.

எ.து. தண்டிகை, பல்லக்கு குதிரை முதலான வாகனங்களும், தாம்பூலந்தின்னல், பிரமபத்திரவகை யனுட்டித்தல், பொல்லாத வார்த்தைகளைப் பேசி வருதல், தன்சுயபத்தினி இல்லாமல் ஒருவனாக வருதல், ஈவதில்லாத மனதுடனே வருதல், சத்தியந்தவறுதல், நோயாளியுடனே கூடல், மலசலமிடுதல் இவையெல்லாம் உலகம் புகழாநின்ற பரங்குன்றத்தை வலம்வருகின்ற போது, இந்தக் குற்றங்களெல்லாம் ஆகாதென்றவாறு.

36. ஓரடிக்கு நாற்காமிய முதலிடு மொன்றோ
டொன்றடி யிட்டாற்
பாரிவெட்டுவர் முன்றடிக் குலைவினை
பறந்திடுநாற் பாதஞ்
சீரனைத்துறு மைந்தடிக் கிருவினை சிதையு
மாறடி யிட்டார்
பாரில் போகமும் மோட்சமும் பெறுவர்பரங்
கிரிவலம் வந்தால்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

எ.து. இப்படி வலம் வந்தால் பலன் என்னவென்றால் ஒரு அடிக்குத் தரும, அர்த்த, காம, மோட்சமிந்த நாலுகாரியமும் உண்டாகும். இரண்டடி நடந்தால் முன் கல்யாண பலன் கொடுத்து வையாதவருக்கும், இப்போது கல்யாணமாகும். மூன்றடி நடந்தால் கொலைபாதகந்தீரும். நாலடி நடந்தால் அட்டலட்சுமியும் உண்டாகும். ஐந்தடி நடந்தால் பிறப்பிறப்பு நீங்கும். ஆறடி நடந்தால் இகத்திலே போகமும், பரத்திலே மோட்சமுமுண்டாகும். இந்த பராசலத்தை வலமாக வந்தாலென்றவாறு.

37. ஏழடிக்கு நூறு யாகஞ்செய் வேட்கைய
ரிந்திர பதிதானுஞ்
சூழுமெட் டடிக்குப் பிரமம் பதி தோயு
மொன்பதி மாலாங்
கேழ்செய் பத்தடிக் கிச்சிவ லோகத்திற்
கிளர்சிவ னடியராவர்
ஆழ்கடற் சுழற்சிவ பரங்கிரி யினையடி
வலம்வரலா மன்றே

எ.து. பின்னும் உலகத்திலே நூறுபாகஞ் செய்து இந்திரபதம் வேணுமென்ற ஆசைகொண்ட பேருக்கு, ஏழடி நடந்தால் அவர்களுக்கு இந்திர பதியுண்டாகும். எட்டடி நடந்தால் பிரம்மலோகம் கிடைக்கும். ஒன்பதடி நடந்தால் விஷ்ணு லோக முண்டாகும். பத்தடி நடந்தால் பிரகாசம் பொருந்தின சிவலோகத்திலே சிவனடியாருடனே கூடியிருப்பார்கள்.

பிரதெட்சணமெல்லாம் வந்தால் அந்தப் பலன் குமார சுவாமியிடத்திலே கடனாக இருக்கும் சமுத்திரஞ் சூழ்ந்துவரா நின்ற சிவபரங்கிரியை அடிவைத்து வலம் வந்தாலிந்தப் பலன்களையெல்லாம் கொடுக்கும் என்றவாறு

38. குனிந்து கும்பிட்டாற் குமாரனுண் டாகுமுங்
குணிலத்தில் வீழுந்தே
கலனந்த வர்க்கலிங் கங்களும் வெறுக்கையு
மளித்திடும் கோடிட்டால்
மனங்கொளாசைக ளுதவிடும் சுபாவத்தால்
வந்திடல் வினைதீரும்
மனம்பொருந்திய கங்கைசூழ் பரங்கிரியது
வலம்வர லாமால்.

எ.து. குனிந்து கும்பிட்டுக் கொண்டு வந்தால் புத்திர சந்தான முண்டாகும். பூமியிலே சாஷ்டாங்கமாக விழுந்து தெண்டன் பண்ணிக்கொண்டு வந்தால் நினைத்த காரியங்களுந் திரவியங்களும் அன்னமும் வஸ்திரமும் உண்டாகும். கோடுகீறி வந்தால் மனதிலே நினைத்த ஆசையெல்லாமுண்டாகும். சுபாவமாய் நடக்கிறபடி நடந்து வந்தால் சகல வியாதிகளும் தாரித்திரங்களும் தீர்ந்துபோம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அன்னங்கள் விளையாடுகின்ற, தாமரையுடைய சரவணப் பொய்கை சூழாநின்ற பரங்கிரியை இந்தப்படி வலம் வரவேணும் என்றவாறு.

39. அங்குலத் தடிமிட்டவர்க் காயுளாம்
அடியின்மேல் அடிவைத்து
மங்குலக் குகைபடைத்தவ னருளுறு
மங்கமே வருளுற்றாற்
பொங்கவோர்ந்தன சகலபாக் கியம்வரும்
பொருந்துசென் னியின்வந்தால்
கங்கை சூடினா னுறுப்பெறும் பரங்கிரிக்
கந்தனை வலம் வந்தால்.

எ.து. அங்குலப் பிராமணம் அடி வைத்து வலம் வந்தால், பிரமா நிண்ணயம் பண்ணின ஆயிசு தப்பி அதிக ஆயிசு உண்டாகும். அடிமேலே அடிவைத்து வந்தால் சத்தமேகங்களையும் குகையிலே அடைத்த குமாரசுவாமி அருளுண்டாகும். அங்கப்பிரதெட்சணம் வந்தால் சந்தோஷத்துடனே நினைத்த காரியங்களுஞ் சகல வியாதியும் தீர்ந்து சகல பாக்கியங்களும் உண்டாகும். தலையாலே நகர்ந்து வந்தால் கங்கையைச் சடையிலே தரித்த பரமசிவனைப்போலே சொரூபமாவார்கள் பரங்குன்றத்தி லெழுந்தருளி யிருக்கும் கந்தசுவாமியை வலமாக வந்தால் என்றவாறு

40. தனித்து வந்திடல் சத்துடன் வருகுத
றனது பன்னியின் போந்தல்
புனிற்றிளம் பிறைமவுலியோன் குழாத்தொடும்
போகுதல்செபத் தொடும்வான்
மனத்தையா னந்தப்படுவித்தல் கைகட்டல்
மவுனமு னில்லாமல்
கனத்தபொற் பரங்கிரி வலம்வரன்
முனிகணங்களுக் குனா செய்தார்.

எ.து. தானெருவனாகத் தனித்து வருதல், சத்துக்களுடனே கூடி வருதல், மூன்றாம் பிறைச் சந்திரனைச் சடையிலே தரித்த சிவனுடைய அடியார்களுடனே வருதல், செபம் பண்ணிக் கொண்டு வருதல், மனத்தை சபலப்படுத்தாமல் சந்தோஷப்படுத்தி வருதல். போசனம் பண்ணாமல் வருதல் இப்படி வைராக்கிய விரதமாக பலம் பொருந்திய தங்க சொரூபமாகிய பரங்கிரியை வலம் வரவேணுமென்று நைமிசாரணிய ரிஷிகளுக்குச் சூதமகாரிஷி கிருபையுடனே சொல்லுவார் என்றவாறு.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வேறு

41. கொங்கணர் குலிங்கரொடு சிங்களர் கலிங்கரொடு
கோசல மராடர் துளுவர்
கங்கார் தெலுங்கர் குருநாடர் தருநாடர்கள்
கடாரர் கவுடத் துவர்களும்
கொங்காதி கழவங்கர் மகிழ்குச்சரம் விதேகநகர்
கொல்லா புரிவல்ல வர்களும்
மங்கலம் முழங்க சதுரங்க முடனங்க
வலம்வந் தனர்கள் கந்தகிரியே!

எ.து. கொங்கண தேயத்தார், குலிங்க தேயத்தார், சிங்கள தேயத்தார், கலிங்க தேயத்தார், துருவ தேயத்தார், கங்கா தேயத்தார், தெலுங்க தேயத்தார், குருநாட தேயத்தார், கருநாட்டு தேயத்தார், கவுட தேயத்தார், கொங்கு தேயத்தார், வங்க தேயத்தார், குச்சர தேயத்தார், விதேக தேயத்தார், கொல்ல தேயத்தார், பல்லவ தேயத்தார், இவர்களெல்லாருஞ் சதுரங்க சேனையுடனே வந்து, இந்த ராசாக்களெல்லாம் அங்கப்பிரதெட்சணம் வந்தார்கள், ஸ்ரீ கந்தகிரியை என்றவாறு

42. ஆரியர் விராடர்செறி மானவர்கள் பப்பரவாள்
புரிவில் லவர்களுஞ்
சேரரொடு சோழர்தமிழ் நாடரொடு கேகயர்கள்
சீறுபுலி மாகதர்களும்
வீரமுறு மொட்டியர்கள் நாகரிகர் கன்னடர்கள்
வீறுதுளுவத் தவர்களும்
ஆரமுத மொத்தருள் பராசலம் வலம்புரித
வங்கவலம் வந்தனர்களே

எ.து. பின்னும் ஆரியதேயத்தார், விராட தேயத்தார், மாளவ தேயத்தார், பப்பர தேயத்தார், வில்லவ தேயத்தார், சேர தேயத்தார், சோழ தேயத்தார், பாண்டிய தேயத்தார், கேகய தேயத்தார், மாகத தேயத்தார், ஒட்டிய தேயத்தார், நாகரிக தேயத்தார். கன்னட தேயத்தார், துளுவ தேயத்தார் இந்த தேயத்தாரெல்லோரும் வந்து தேவாமிர்தத்துக்குச் சமானமாகிய கிருபை பொருந்திய பராசலத்தை வலம் வர வேணுமென்று அங்கப் பிரதெட்சணம் வந்தார்கள் என்றவாறு.

43. ஆறுமுக நாதன்மருள் மீறிவெறி யாடுவர்
வேசமுட னாடி வருவார்
சீறுபுலி போலுலவி யோடிவரு வார்மனது
தேறுகுறி பேசி வருவார்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நாறுமல ரோடரிசி யேவிமறி ஞாளிபெலி
நாடிவரு கூளிக் கிடுவார்
பாறுசெறி போரசுர னாவிதிரி வாரவர்
பரங்கிரி வலம்புரிகுவார்.

எ.து. பின்னும் வலம் வருகிற பேர், சண்முகநாதன் மருளானது கொண்டு வெறியாடல் செய்யிற பூசாரிகளைப் போல ஆவேசத்துடனே சிறிதுபேர்கள், ஆடிக்கொண்டு வருகிறபோது, அதிக கோபமுண்டான புலிபோலே பாய்ந்து மீறிக் கொண்டு, கூட ஓடி வருகிறபேர்கள், மனது விதனந்தீர்ந்து தேறும்படி அவாளவாள் கேட்ட குறிகளைச் சொல்லி வருவார்கள்.

சிறிது பேர்கள் அட்சதையும், பொற்பூவுங் கலந்து வீசிக்கொண்டு வருவார்கள். சிறிது பேர்கள் ஆடுகளைக் கோழிகளைச் சந்திகளிலே இருக்கிற பேய் பூதங்களுக்குத் திருவிழாக்காலங்களிலே பெலி போட்டுக் கொண்டு வருவார்கள். உத்த களத்திலே அசுராளுடைய சீரத்தைக் கழுகும் பருந்தும் கொத்தும்படி சம்மாரம் பண்ணும் வேலாயுதக் கடவுள் எழுந்தருளியிருக்கும் பரங்கிரியை வலம்புரிவார்கள் இப்படிச் சிலபேர்கள் என்றவாறு

44. ஆடை யெறிவார் இவைசெய் பூரியெறிவார் பரம
தானவர்க ளான தெறிவார்
மாடையெறிவார் முதுகூடை யெறிவார்தவன
மானவர்களான தெரிவார்
பாடி வருவார் விசிறிவீசி வருவார் உதக
பந்தார்வ ரோடி யிடுவார்
தேடி யறியாத முருகேச னுறுகந் தகிரி
சித்தி வலமாய் வருவார்.

எ.து. பின்னும் வலம் வருகிறபோது கேழ்க்கிற பேருக்குங், கேளாத பேருக்கும் சிறிது பேர்கள் வஸ்திரங்களைக் கொடுப்பார்கள். சிறிது பேர்கள் கும்பல் கும்பலாய்த் திரவியங்களைக் குவித்துக் கொண்டு யாசகருக்குப் பூரிதானங்களைக் கொடுப்பார்கள். சிறிது பேர்கள் பரமசிவனடியாருக்கு ஆக வேண்டிய பொருளைக் கொடுத்து வருவார்கள். சிறிது பேர்கள் பிராமணாளுக்குத் தங்க வராகனைக் கொடுப்பார்கள். சிறிது பேர்கள் அன்னங்கள் கறி வகை முதலானதுகளைக் கூடையிலே அள்ளி அள்ளிப் பரதேசிகளுக்குக் கொடுப்பார்கள். சிறிது பேர்கள் வெய்யிலிலே இளைத்து தாகமாக வருகிறபேருக்கு, சுக்குவெல்லந் தவனப்புளி, வெள்ளரிப்பிஞ்சு முதலானதுகளையும் கனிவர்க்கங்களையும் கொடுத்து வருவார்கள். சிறிது பேர்கள் சுவாமி பேரிலே பாடிக்கொண்டு வருகிற பேருக்கு விசிறியாலே வீசிக்கொண்டு வருவார்கள். சிறிது பேர்கள் தண்ணீர்ப்பந்தலிலே வைத்திருந்த நீர்மோர் பானகஞ் சந்தன தாம்பூலம், இளநீர், கரும்பு தீர்த்தம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

இதுகளை ஓடிவந்து கொடுப்பார்கள். தேடியறிதற்கரிய முருகேசர் எழுந்தருளியிருக்கும் பரங்கிரியைச் சுத்தி வலம் வருகிறபேர்கள் என்றவாறு

வேறு

45. வீரலெட்சுமி பாக்கியலெட்சுமி
விசையமாஞ் சவுரிய லெட்சுமி
தீர காருண்ய லெட்சுமி சௌம்மிய
திருவும் சாம்பிராச்சிய லெட்சுமி
பாரில் கீர்த்தி லெட்சுமியுடன் தான
லெட்சுமியு மேபரி வாக
சீர்செய் யட்ட மங்கலமெடுத் தேந்தியே
சிவமலைவலஞ் செய்வார்.

எ.து. இன்னமும் பிரதெட்சண மகிமை என்னவென்றால், வீரலெட்சுமியும், பாக்கிய லெட்சுமியும், சவுரிய லெட்சுமியும், காருண்ய லெட்சுமியும், சவும்மிய லெட்சுமியும், சகல சாம்பிராச்சிய லெட்சுமியும், கீர்த்தி லெட்சுமியும், சர்வதால லெட்சுமியும், இந்த அட்டலெட்சுமியும் அட்ட மங்கலம் எடுத்துக்கொண்டு ஆசையுடனே சிறப்போடுங் குமாரசுவாமி பேரில் கலியான சோபனங்களைப் பாடிக் கொண்டு பரங்கிரியை வலம் வருவார்கள் என்றவாறு.

46. கார்த்திகைப் பெண்களறுவரும் பாரதி
கமலை யுங்கிரி மின்னுங்
கீர்த்தி பெற்ற வானவ ரிறைக்கோடி
மகிழ்செயும் புயங்க ரிந்கோடி
பூர்த்தி பெற்ற காந்து ருவரிர்
பிடிகளுஞ் சோபனம் பாடி
மூர்த்தி பெற்ற சண்முக னுறு
பரங்கிரி முறைவலஞ் செய்வார்.

எ.து. கார்த்திகைப் பெண்கள் ஆறுபேரும் சரசுவதியும், லெட்சுமியும், பருவதவர்த்தனியும் அதிக போகத்தையுடைய தேவேந்திரன் பாரியாளான இந்திராணியும், இரதியும், நாகலோகத்துப் பெண்களும், காந்துருவ தேயத்துப் பெண்களும் குமாரசுவாமி கீர்த்தியை சுபசோபனம் பாடிக்கொண்டு, அதிக மூர்த்தியைப் பெற்ற சண்முகநாதர் எழுந்தருளியிருக்கும் பரங்கிரியை முறை முறையாக வலம் வருவார்கள் என்றவாறு.

47. அரம்பை மாதர்கள் பூரண கும்பங்க
ளகிலமாதர்க ளெல்லாம்
கரங்க டாங்கு முத்தாலத்தி பவழாலத்தி
கற்பனைக் கெட்டா

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிரங்க டாங்கிய கருப்புர வாலத்தி
சிவந்தநீ ராலத்தி
பரங்கி ரிக்கொரு திட்டிவா ராமலே
பாடியே வலமாவார்.

எ.து. தேவலோகத்துத் தேவரம்பைகளும் பூரண கும்பங்களெடுத்துக் கொண்டு வரவும், பூலோகத்துப் பெண்களையெல்லோரும் கையிலே முத்தாலத்தி பவழா லத்தியும், சிரசின் பேரிலே சொல்லுதற்கரிதாகிய மகிமையுடைய கற்பூரவாலத்தியும், சாம்பிரர்ணிப் புகை, எட்டுவித தூபக் கலசமும், பின்னும் மஞ்சள், முத்துச்சுண்ணம் அருகு முதலானது கலந்த நீராலத்தியும் எடுத்துக்கொண்டு, கல்யாண கோலமாகிய பரங்கிரிக்கு யாதொரு திட்டி தோஷமும் வராமல் சோபனங்களைப் பாடிக் கொண்டு வலம் வருவார்கள் என்றவாறு.

48. வேத மோதுவார் மின்கள் பல்லாண்டுகள்
விளம்பியே வருவார்முற்
சாதி மாதர்கள் மங்களம் பாடுவார்
தண்மை சோபஞ்சால
மாது வாழிகள் பாடுவார் மற்றுளோர்
மலர்களா லருச்சித்துச்
சோதியாகிய திருப்பரங் கிரியினை
தொழுதடி வலஞ்செய்வார்.

எ.து. வேதப் பிராமணாள் பெண்டுகள் சுபமான பல்லாண்டுகள் சோபன முதலானதுகள் சொல்லிக் கொண்டு வருவார்கள். முதற்சாதியான பதுமினி சாதிப் பெண்கள் மங்களம் பாடிக்கொண்டு வருவார்கள். அதிக பொறுமையுடைய பாஞ்சால தேசத்துச் சித்தினிப் பெண்கள் வாழி பாடிக் கொண்டு வருவார்கள். மற்ற தேசத்துப் பெண்களெல்லாம் சுகந்தமான புஷ்பங்களை அருச்சனை பண்ணிக்கொண்டு சோதி சொரூபமாகிய திருப்பரங்குன்றத்தை வணங்கி அடிப்பிரகாரம் வலஞ்செய்வார்கள் என்றவாறு.

49. பரத நாடகந் தெரிந்தபேர் நடனங்கள்
பண்ணியே வருவார்கள்
சரித வானந்க் களிப்புகள் பாடியே
தாண்டவஞ் செய்வார்கள்
விரத மேவிய வுபாசகர் சாரங்கி
வினைக டம்பூர்கள்
வரத ராகிய குமரவேள் மலைவலம்
வாசித்து வருவார்கள்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எ.து. பரத நாட்டியந் தெரிந்த பேர்கள் நடனம் பண்ணிக்கொண்டு வருவார்கள். மகா சந்தோஷத்துடனே சிறிது பேர்கள் ஆனந்தக் களிப்புகள் பாடித் தாண்டவ நடனம் பண்ணிக் கொண்டு துணங்கைக் கூத்தாடிக் கொண்டு வருவார்கள் குமாரசுவாமியினுடைய விரதமிருக்கிற சுத்த வுபாசகரான பேர்கள், சாரங்கி கின்னரி, வீணை, தம்பூரிதுகளாலே குமார சுவாமி எழுந்தருளியிருக்கும் சிறகந்த மலையை வலமாக வருவார்கள் என்றவாறு.

50. சோம வாரநாட் சுக்கிர வாரநாட்
தலாச்சட்டி யறுநாளு
மேம மாகிய விசாக நாட் கார்த்திகை
யெய்து நாட் பிதுர்நாட்க
ணேம மாகிய விரதநாள் விசேடநாள்
வேத்துநாள் தூயதாக
காம தேன்வளர் பரங்கிரிக் குமரனைக்
கடிவலம் வரலாமால்.

எ.து. சோமவார நாள், சுக்கிரவார நாள், அற்பசி மாத கந்தர் சஷ்டி ஆறுநாள், கந்தசுவாமி பிறந்த விசாக நட்சேத்திரம் வருகிற நாள், மற்ற விரதங்கள், நோன்புகள் வருகிற நாட்கள். பின்னும் விசேடநாள் இவையன்றி சுவாபமான நாள் இந்த நாள்களிலே சரவணப் பொய்கையில் ஸ்நானம் பண்ணி ஆசாரத்துடனே, காமதேனு வளராநின்ற பரங்கிரிக்குகையாகிய சந்நிதானத்திலே கல்யாண கோலமாக எழுந்தருளியிருக்குங் குமாரசுவாமியை வலமாக வரவேணுமென்றவாறு

51. தேவ யானையை மணம்புரி குமரனை
சிம்மவா தனத்தேத்தித்
தேவதுந்துபி முழங்கிடப் பஞ்சவாத்
தியங்களு முரசேங்கத்
தேவயிந்திரன் முதலினோர் பங்குனித்
திருவிழாக் குழாத்தொடு
மேவரப் போற்றிய திருப்பரங் கிரிவல
மிரதமும் வருமம்மா

எ.து. பங்குனி மாதஞ் சோதி நட்சேத்திரத்திற தேவேந்திரன் புத்திரியான தெய்வ யானையைத் திருக்கலியாணஞ் செய்து கொண்ட குமாரசுவாமியைத் தேவசிம்மாசனத்தில் வைத்துக் கொண்டு தேவதுந்துமி முழங்கவும், தேவேந்திரன் முதலாகிய தேவர் கூட்டங்களும், திருக்கல்யாணஞ் செய்த பங்குனித் திருவிழாக் கூட்டங்களும் சூழ்ந்து வரத் தக்கதாகச்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சத்துருவாதிகள் தோத்திரம் பண்ணி வணங்காநின்ற திருப்பரங்குன்றத்தை, ஆசையான் குதிரைகள் இழுக்கத் திருமணக்கோல அலங்காரத்துடனே ஓரறிவாகிய திருத்தேரானதும் பிரதெட்சணம் வந்தது என்ன ஆச்சரியம் நைமிசாரணிய வனத்து ரிஷிகளே என்று புராணிகரான சூதமகாரிஷி யானவர் சொல்லுவார் என்றவாறு.

52. திருப்பரங் குன்றஞ் சத்தியகிரி யென்றும்
சிவபரங் கிரியென்றும்
விருப்பமுற்றிய சிற்கந்த கிரியென்றும்
வேதனமான கிரியென்றும்
பருப்பதங்கிரி கயிலையங்கிரியும்
பஞ்சாட்சர கிரியென்றும்
பொருப்புமச் சுமந்தஞ் சுபகிரி யென்றும்
புரிகுமாரம் முத்திகிரியே.

எ. து. இந்த கிரிக்கு அனந்த நாமதேயம் உண்டு. அதில் எதிர்காலப் பெயர் திருப்பரங்குன்ற மென்றுஞ் சத்தியகிரி என்றும் சிவபரங்கிரி என்றும் ஆசையொடுங்கூடிய சிறகந்தமலை என்றும் விஷ்ணுகிரி என்றும் பிரமகிரி என்றும் மேருகிரி என்றும் வெள்ளியங்கிரி என்றும் பஞ்சாட்சரகிரி என்றும் கல்லத்திகிரி என்றும் கல்யாணபுரி என்றும் குமாரபுரி என்றும் சீவன்முத்திபுரி என்றும் அந்தரப்பூத பராசலம் என்றும் பதினான்கு நாமதேயத்தைப் பெற்றது இந்த சிவரூபமானகிரி என்றவாறு

வேறு

53. நெருன லுமைக்கொழு நனுரை பரம்பரையா
நிரம்ப வழகிய பண்டாரந்
திருவிருத் தவுரையை வயிரவனா மம்பல வாணன்
செப்புஞ் சீர்செயரு
டரிக்கும் புலவோர்கள் குமரனுக் கன்பர்க்
குவரென் றநவை யோர்ந்தே
குருமுரு கன்னடி தனக்கென வேட்கை
யடங்காம லுரைக்குன் றிற்றன்றே

எ.து. ஆதி காலத்திலே இந்தப் பரங்கிரியப் புராணத்தை, உமையவளுக்கு நாயகனாகிய பரமசிவன் திருவாக்கினாலே நந்தீசுரர் கேட்டு அதைச் சனத்குமாரருக்குச் சொல்லவும், சனத்குமாரர், வேத வியாசருக்குச் சொல்லவும், வேத வியாசரானவர் சூத மகா ரிஷிக்கு சொல்லவும் சூதமகாரிஷியானவர் நைமசாரணிய ரிஷிகளுக்குக் கிரந்த வாக்கியமாகச் சொன்னதை நிரம்ப வழகிய பண்டாரம் தமிழினாலே திருவிருத்தமாகச் சொன்னார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkata

அந்தத் திருவிருத்தத்துக்குத் திரப்பரங்குன்றம் ஆறுகாற்பீடம் வயிரவன் அம்பலவாண பாரதி என்பவர் உரை சொல்லவும், அந்த உரையை அழகுடைய குழந்தையான கந்தசுவாமினுடைய கிருபை பொருந்தின வித்துவான்கள் யாதொரு குற்றமிகுந்தாலுந்திருத்தி குற்றம்பாடிற் குமரனை என்ற பழமொழி இருப்பதால் குழந்தையினுடைய குதலைச் சொல்லை ஒப்புக்கொள்வதுபோலக் குமாரசுவாமிக்கு அற்புதப் படுத்துவார்ளென்கிற நிச்சயத்தை அறிந்து சற்குருவாகிய முருகனுடைய சரணாரவிந்தம் பெற வேண்டி என் ஆசையானது அடங்காமல் இந்த உரையைக் குளரித்தது என்றவாறு

கிரிவலச்சருக்கம் முற்றும்

ஆகச் சருக்கம் பனிரெண்டுக்கு திருவிருத்தம் 579
சிவசண்முக தேசிகன் துணை

சிருட்டி எழுபத் தோராயிர நானூற்று நாற்பான்
செல்கோடி நாற்ப திலக்கமுந் தொண்ணூத்
தெண்ணாயிரத் தீடனெண்ணூத்திப் பதினொரு
வருடத்தினத்திலே கலிநாலாயிரத்தூத் தொளாயிர முப்பா நான்கா
மருத்து சகார்த்தங்க ளாயிரத் தெழுநூத் தன்பா
னைந்தில் விசைய வருடங் கன்னி மாதத்தில்
பருத்த நாலாந்தேதி புதவாரம் விசாகம் பஞ்சமியாம்
பரங்கிரியின் புராணவுரை பகர்தல்

எ .து. இப்பொழுது பிரம்ம சிருட்டி அறியும்படி அந்த பிரம்ம தேவருக்கு கிரேதாயுக வருஷம் பதினேழு நூறாயிரத்து இருபத்தெண்ணாயிரம் வருடம் திரேதாயுகம் பனிரெண்டு நூறாயிரத்தி தொண்ணூத் தாறாயிரம் வருடம் துவாபரயுகம் எட்டு நூறாயிரத்து அறுபத்து நாலாயிரம் வருஷம் கலியுகம் நாலுநூறாயிரத்து முப்பத்தீராயிரம் வருஷம் ஆக யுகம் நாலுக்கு நாற்பத்துமூணு நூறாயிரத்து இருபதினாயிரம் வருஷம் கொண்டது ஒரு சதுர்யுகம்.

இப்படி சதுர்யுகம் இரண்டாயிரம் வருஷம் கொண்டது ஒருநாள். நாள் முப்பது கொண்டது ஒரு மாதம். மாதம் பனிரெண்டு கொண்டது ஒரு வருஷம் வருஷம் நூறு கொண்டது பிரம்மாவுக்கு பூரணாயிசு.

ஆகையால் இப்பொழுது பூரண பட்டத்தில் இருக்கிற பிரமாவுக்குச் சென்ற வயது அன்பதும் சென்று, அன்பத்தோராம் வருஷம், முதல் வருஷம், முதல் மாதம், முதல் தேதி, பகல் முதற் சாமமுஞ் சென்று இரண்டாஞ் சாமத்தில் முன்றா முகூர்த்தத்தில் இப்போது திட்டிப்பு செகம் அண்ட முழுதுங் தொழில் நடக்குது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இப்படிப்பட்ட சதுர்முகப் பிரம்மா இப்போது செகத்திட்டிப்பு சென்றது வருஷம் எழுபத்தோராயிரத்தி நானூத்தி நாற்பது கோடியே நாற்பது லட்சத்துத் தொண்ணூத் தெண்ணாயிரத்தித் தொண்ணூத்திப் பதினொரு வருஷத்தில்

செல்லாநின்ற கலியுகம் நாலாயிரத்துத் தொளாயிரத்து முப்பத்து நான்குஞ் சாலிய வாகன சகார்த்தம் ஆயிரத்தி எழுநூத்தி அன்பத்தைந்தில், விசைய வருஷம் புரட்டாசி மாதம் நாலாந்தேதி புதன்கிழமை விசாக நட்சத்திரம் பஞ்சமி திதியில் இந்தப் பரங்கிரிப் புராணத்துக்கு உரை சொல்லி நிறைவேறினது என்றவாறு.

ஆக திருவிருத்தம் 580

சிவசுப்பிரமணிய சுவாமி ரட்சிக்க வேண்டியது.

அழகிய அச்சுப்பணிகளுக்கு ....
திருப்தி உடனடி அச்சகம், காரைக்குடி. போன் : 235925

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆதீனப் பணிகளில் சில

1. சுவாமிகளின் ஆன்மார்த்த சிவபூஜாமூர்த்தி அருள்தரு மங்களாம்பிகை உடனாய அருள்மிகு வாஞ்சிநாதப் பெருமானுக்கு காலையும், மாலையும் பூஜை செய்தல்.

2. நகரத்தார் பெண்களுக்கு சைவ சமய தீட்சை செய்வித்தல். சைவர்களுக்கும் மற்ற வகுப்பு அன்பர்கள் ஆண், பெண் வேற்றுமையின்றி சிவதீட்சை செய்வித்துச் சைவ சமயத்தைச் சார்ந்தவராக்கும் சமயப் பணி செய்தல்.

3. துழாவூர் ஆதீனம் சமயம் முதலான சிவதீட்சைகளைச் செய்விப்பதுடன் தலைசிறந்த சைவ சமயக் கொள்கை பரப்புதல்.

4. ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் கிருஷ்ணபட்சப் பிரதமை திதியில் மஹா குருபூஜை நடத்துதல். அறச் செயல்கள் செய்வோருக்கு, அறமனச்செம்மல் என்னும் கௌரவப்பட்டம் வழங்குதல்.

5. சைவ சமய அநுட்டான விதிகள் மற்றும் சிறுசிறு நூல்கள் வெளியிட்டு சைவ சமயத்தை வளர்த்தலும், பாதுகாத்தலும், நல்ல சமுதாயத்தை உருவாக்குதலுமாம்.

அழகிய அச்சுப்பணிகளுக்கு ....
திருப்தி உடனடி அச்சகம், காரைக்குடி.
போன் : 235925

Center for Shaiva Studies, Pondicherry Collection